## எட்டாந்தரச்

# சரித்திரச் சுருக்கம்

## (முதலாம் பருவம்)

[புதிய பாடத்திட்டத்துக்கும் சரித்திரம் கற்பித்தற்
குரிய வழிகாட்டிக்கும் அமைய எழுதப்பெற்றது.]

954
தர்ம

சுன்னுகம் :
...லங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

...ுரிமை ]    1970    [விலை : ரூ. 1-25

எட்டாந்தரச்

# சரித்திரச் சுருக்கம்

(முதலாம் பருவம்)

[புதிய பாடத்திட்டத்துக்கும் சரித்திரம் கற்பித்தற்குரிய வழிகாட்டிக்கும் அமைய எழுதப்பெற்றது]


புன்னாலைக்கட்டுவன்

இ. தர்மலிங்கம்

[சரித்திர கதாவாசகம், இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும், சரித்திரச் சுருக்கம் VI—VII, இலங்கைச் சரித்திர வினாவிடை, உலக சரித்திர வினாவிடை முதலிய நூல்களின் ஆக்கியோன்.]



VIJAYALUCKSHMI BOOK DEPOT,
243, Galle Road,
WELLAWATTE, COLOMBO-6.
Tel: 88930



சுன்னாகம்:

வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்


பதிப்புரிமை] 1970 [விலை: ரூ. 1-25

970

954
956

EVELYN RUTNAM INSTITUTE
64
REFERENCE LIBRARY
JAF

[ உரிமை பதிப்பகத்தாருக்குரியது. ]

சுன்னுகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தினருக்காக, குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால் சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# முகவுரை

இற்றைக்கு 35 ஆண்டுகளுக்கு முன்பிருந்து இரண்டாம் வகுப்புத் தொடக்கமாகச் சரித்திரம் ஒரு 'தனிப்பாடமாக' விளங்கியது. ஒவ்வொரு வகுப்புக்கும் ஏற்ற பாடத்திட்டமும் வித்தியா பகுதியால் விதிக்கப்பட்டது. ஆரம்ப வகுப்புக்களுக் குரிய சரித்திர பாடத்திட்டத்திற் கேற்பச் 'சரித்திர கதா வாசகம்' என்னுந் தொடரில் சில நூல்களை வெளியிட்டோம். இந் நூல்களின் தொடர்ச்சியாக இடைநிலை வகுப்புக்களுக்குரிய நூல்களை 'இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்' (முதலாம், இரண்டாம் பாகம்) என்னுந் தொடரில் வெளி யிட்டுச் சரித்திர பாடத்தை மாணவர் விருப்புடன் கற்பதற்குப் பணிபுரிந்தோம். இந் நூல்களைப் பாடநூற் சபையும் பாடசாலை களும் உவந்தேற்று எமக்குப் பெரும் ஆதரவளித்தன.

பின்பு, ஆரம்ப வகுப்புக்களிலே சரித்திரம் தனிப்பாடமாக அமையாது 'சூழற் கல்வி' யிற் சேர்க்கப்பட்டது. அவ்விதம் சூழற் கல்விக்குரிய சரித்திரப்பகுதிக்குதவியாகச் சரித்திர கதாவாசகத் தொடர் நூல்களை இப்போதும் உபயோகித்து ஆதரித்து வரும் ஆசிரிய அன்பர்களுக்கு எமது நன்றி.

சரித்திரம் 'ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வரலாற்றுக்கல்வி யாக' இப்பொழுது ஆறும் வகுப்பிலே ஆரம்பமாகிறது. இதற் குதவியாகக் கல்விப்பகுதியார் புதிய பாடத்திட்டத்தை வகுத் துள்ளனர். சரித்திரத்தை முறைப்படி கற்பதற்குதவியாகக் கல்வி அமைச்சு 'வழிகாட்டி'யைச் சிறந்தமுறையிலே அமைத் துப் பெரும்பணி புரிந்துள்ளது. இப் பாடத்திட்டத்திற்கும் 'வழிகாட்டி'க்குமேற்ப எமது இடைநிலை வகுப்புக்களுக்குரிய சரித்திர பாடநூல்களை மாற்றியமைத்து, இக்காலத் தேவைக் கேற்ப வெளியிடுதல் வேண்டுமென ஆசிரிய அன்பர் பலர் கூறிய ஆலோசனையை அனுசரித்து 'சரித்திரச் சுருக்கம்' என்னும் தொடரில் 'ஆறுந்தரச் சரித்திரச் சுருக்கம்', 'ஏழாந்தரச் சரித்திரச் சுருக்கம்' என்னும் நூல்களை வெளியிட்டோம். அவற்றின் தொடர்ச்சியாக எட்டாந்தரத் திற்குரிய இந்நூலை இப்போது வெளியிடுகின்றோம்.

இந்நூல் எட்டாந்தரப் புதிய பாடத்திட்டத்திற்கேற்பச் சரித்திரங் கற்பிப்பதற்குரிய கல்வி அமைச்சின் 'வழிகாட்டி'யைத் தழுவி அமைக்கப்பெற்றது. மாணவர் எட்டாந்தரத்திற் கற்க வேண்டிய அளவை ஆராய்ந்தறிந்து மிகச் சுருக்கமாகவேனும் அதிகம் பெரிதாகவேனும் அமையாது, அவர்கள் தாமாக விளங்கக்கூடிய மொழிநடையில் சித்திரவிளக்கங்கள், தேசப் படங்கள், பயிற்சிகள், புதுமுறை மாதிரிவினாக்கள் முதலியவற்றுடன் விளங்குகின்றது.

இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுங்கால் எய்தும் ஊறகற்றி ஊக்கந்தரும் திருவருட் சக்தியை வழுத்தி நாம் முன்னர் வெளியிட்ட நூல்களை ஆதரித்து எமக்கு ஊக்கமளித்ததுபோல மாணவர்க்குத் தக்க ஒரு வழிகாட்டியாகத் தயாரிக்கப்பெற்ற இச் சிறு நூலையும் கல்வியுலகு ஆதரித்து இன்னும் இத்தகைய முயற்சியில் எம்மை ஈடுபட உதவிபுரியுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தமிழ் நூல்களைச் சிறந்தமுறையில் ஆக்கவும் பதிப்பிக்கவும் உதவிபுரிதல் எம் பணியெனக் கருதி இதை வெளியிடத் துணிந்தோமாதலின், இதன் ஆக்கங்கருதிச் செய்யப்படுந் திருத்தங்களை உவந்தேற்று, ஆராய்ந்து அடுத்த பதிப்பில் ஏற்ற திருத்தங்களைச் செய்வாம்.

**இ. தர்மலிங்கம்**

# பொருளடக்கம்

பக்கம்

அலகு : 1

19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இலங்கை ... ... 1—13

1, 2. 19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் அரசியல் நிலை 1

3, 4. கண்டி அரசாங்கமும் ஆங்கிலேயரும் 8

அலகு : 2

1817—1818 ஆங்கிலேயரின் ஆதிக்கமும் உள்நாட்டுக் கலகங்களும் ... ... 14—18

1, 2. 1817—1818 கலகங்கள் ; வீரகெப்பெற்றிப்பொலா ... 14

அலகு : 3

1818—1850 வரை ... 19—30

1, 2, 3. கோல்புறுக் சீர்திருத்தம் 19

4, 5. 1848ஆம் ஆண்டுக் கலகம் ... 26

அலகு : 4

இலங்கையும் உலகமும் ... ... 31 – 37

1, 2, 3, 4. கைத்தொழிற் புரட்சி ... 31

அலகு : 5

இலங்கையும் உலகமும் ... ... 38—53

1, 2. பிரான்சு—பிரான்சிய அரசியற் புரட்சியும் ஐரோப்பிய யுத்தங்களும் 38

3. 4. பிரான்சிய அரசியற் புரட்சியின் பின் ஐரோப்பா; நெப்போலியன் போனப்பாட் 45

அலகு : 6

இந்தியா ... ... 54—58

மாதிரி வினுப்பத்திரம் — முதலாம்பருவம் 59

அலகு 1

# 19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இலங்கை


பாடங்கள்: (1), (2) 19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் அரசியல் நிலை.
(3), (4) கண்டி அரசாங்கமும் ஆங்கிலேயரும்.

பாடங்கள்: 1, 2

## 19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் அரசியல் நிலை.

ஐரோப்பிய சாதியாரான போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் தமது ஆட்சியை ஏற்படுத்திய வகையையும் அவர்களுடைய ஆட்சியின் பலாபலன்களையும் ஏழாம் வகுப்பிற் கற்றேம். அந்நியர் இலங்கையின் கரையோரப் பகுதியில் ஆட்சி செய்த காலத்தில் கண்டி இராச்சியம் சுதந்திரமாக விளங்கியதென்றும், அதை ஆட்சிசெய்த பேராதனை அரச பரம்பரை கி. பி. 1739ஆம் ஆண்டு நரேந்திரசிங்கன் என்னும் மன்னனுடன் முடிவுற, நாயக்கவமிச ஆட்சி ஏற்பட்டதென்றும்; அவ்வமிசத்தைச் சேர்ந்த இராசாதி இராசசிங்கன் காலத்தில் ஆங்கிலேயர் கி. பி. 1796ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றினர் என்றும்; கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்துச் சென்றுர்கள் என்றும்; அதிற் சித்திபெற்றிலரென்றும் முன்பு அறிந்தோம்.

ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தின் மீது முதன் முதலாக கி. பி. 1803ஆம் ஆண்டு படையெடுத்துச் சென்றபோது நாயக்க வமிசத்தைச் சேர்ந்த ஸ்ரீ விக்கிரம




**1796ஆம் ஆண்டில் இலங்கை**

இராசசிங்கன் கண்டி இராச்சியத்தைப் பரிபாலித்து வந்தான். அவனுக்குப் பிலிமத்தலாவை என்னும் அதிகாரி முதலமைச்சனுகக் கடமையாற்றினுன்.

நாயக்க வமிச அரசர் ஆட்சிக்கு வந்ததன் பின்பு முக்கியமாக ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் காலத்தில் நாயக்கரின் செல்வாக்கு அரண்மனையில் நிலவியது.

1803ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் கண்டிப் படையெழுச்சி தோல்வியுற்றதும், ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் ஆங்கிலேய அரசின் பயம் ஒழிந்ததென்றும், தொன்று தொட்டு அதிகாரம் வகித்துவந்த கண்டிப் பிரதானிகளினுலே தனக்குத் தீங்கு நேரிடக் கூடுமென்றும் நினைத்து, அவர்களுடைய அதிகாரத்தைக் குறைப்பதற்குத் தனது இனத்தவர்களான நாயக்க வமிசத்தினருக்குக் கண்டி அதிகாரிகள் புரிந்துவந்த பல சேவைகளை வழங்கினுன். அதனுலே வெறுப்புற்ற பிரதானிகள் அரசனுக்கெதிராகக் கருமங்களாற்றத் தொடங்கினர். அரசன் அவர்களை அடக்குவதற்குப் பலவிதமான கொடுஞ் செயல்களைப் புரிந்தான். உதாரணமாகப் பிலிமத்தலாவை அரசனுக்கெதிராகச் சதிசெய்ததை அறிந்த அரசன், அவனையும் அவனுடைய மருமகனையும் தலைமைக்காரர்கள் பலரையுஞ் சிரச்சேதம் செய்வித்ததுமன்றி அவர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்தான். அரசனிலே வெறுப்புற்ற பிரதானிகள் ஆங்கிலேயருக்கு ஒற்றராக உதவியதுமன்றி அவர்கள் படையெடுத்துச் சென்றபோது அவர்களை நல்வரவேற்று உதவியுமளித்தனர்.

கண்டிப் பிரதானிகள் மாத்திரமன்றிப் பௌத்த குருமாரும் சனங்களும் அரசனுக்கு மாறுகவிருந்தனர். தனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கின்றனரென ஐயுற்று, பௌத்த குருமார் பலரை அரசன் துன்புறுத்தினுன். பலர் சிறையிலிடப்பட்டனர்; ஒருவர் சிரச்சேதஞ் செய்யப்பட்டார்.

இந்து சமயத்தவனுன இந்திய நாயக்க வமிச அரசன் அதிகாரிகளுக்கும் பௌத்த குருமாருக்கும் செய்த

...டுஞ் செயல்களால் பௌத்தர்களான சிங்கள மக்களின் ஆதரவையும் அன்பையும் இழந்தான். காலகதியில் கண்டி இராச்சிய மக்கள் அரசனுக்கு எதிராகக் கலகஞ் செய்து அவனுடைய ஆட்சியை நீக்க முற்பட்டோருக்கு உதவியளித்தனர். கண்டி இராச்சியத்தின் இத்தகைய அரசியல் நிலையை ஆங்கிலேயர் பயன்படுத்தினர்.

ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக சங்கமே ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையிலே அவர்களின் ஆட்சிக்குட்பட்ட கரையோரப் பகுதிகளை 1796 ஆம் ஆண்டு கைப்பற்றியது. அஃதாவது, ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் கீழே சென்னைத் தேசாதிபதியாகவிருந்த ஹோபாட் பிரபு கட்டளையிட, ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் படைகள் இலங்கையைப் பிடித்தன. ஆனால், இங்கிலாந்து தேசத்து மன்னனின் பெயரிலே இவ்விதம் செய்யப்பட்டது. இதுவன்றி, ஒல்லாந்த மன்னனான ஐந்தாம் உவில்லியம், இங்கிலாந்திலிருந்த மந்திரி சபையின் கேள்விப்படியே கிழக்குத் தேசங்களிலே ஒல்லாந்தர்களை ஆங்கிலேய அதிகாரத்தின் கீழ்ப்படும்படி கட்டளையிட்டான். இவ்வாறிருந்தபோதும் ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் இலங்கையைப் பிடிப்பதிலே பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டது. அதனாலே வர்த்தக சங்கமே ஆட்சியை நடத்தியது.

வர்த்தக சங்கத்தின் நிர்வாகத்திலே ஒரு வருடத்துக்குள்ளாகவே சனங்கள் வெறுப்புற்றுக் கலகம் விளைத்தனர். இக்கலகத்தைப்பற்றி அறிவதற்கு முன்பாகவே 1797 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் ஆங்கிலேய அரசாங்கம் இலங்கையின் ஆட்சியை வர்த்தக சங்கத்திடமிருந்து எடுக்க முடிவுகொண்டு சேர் பிரெடெரிக் நோத் என்பவரை 1798ஆம் ஆண்டு இலங்கையின் ஆள்பதியாக நியமித்தது. ஆங்கிலேய வர்த்தக சங்கம் இதை எதிர்த்தது. வர்த்தக சங்கம் செலவு செய்த பணத்தின் பெரும் பகுதியை இன்னும் பெற்றிலது. இதுவன்றி இந்தியாவின் பாதுகாப்புக்குத் திருக்கோணமலைத் துறைமுகம் வர்த்தக சங்கத்துக்குத் தேவையாக விருந்தது. இக்காரணங்களால்

ஆங்கிலேய அரசாங்கம், இலங்கையின் பரிபாலனத்தை முற்றுக எடுப்பதைக் கைவிட்டது. அரசாங்கமும் வர்த்தக சங்கமும் சேர்ந்து "இரட்டை ஆட்சியை" ஏற்படுத்தின. இந்த "இரட்டை ஆட்சிமுறை" தோல்வியிலேயே முடிந்தது.

ஐரோப்பாவிலே நெப்போலியப்போர்களின் முடிவின் பின்பு பிரான்சியருக்கும் பிரித்தானியருக்கு மிடையே பிரான்சிலுள்ள *ஏமியன்சு நகரில் ஏற்பட்ட ஏமியன்சு உடன்படிக்கையின்படி இலங்கையிலே ஒல்லாந்தராட்சிக் குட்பட்டிருந்த கரையோரப் பகுதிகள் ஆங்கிலேயருக்குச் சொந்தமாகவே, இரட்டை ஆட்சியை ஒழித்துப் பிரித் தானிய அரசாங்கத்தின் நேரடியான ஆட்சியின் கீழ் இலங்கையைக் கொண்டுவர விரும்பி, 1802ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி இலங்கை †முடிசார் குடி யேற்ற நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அதனுல் இலங்கையின் பரிபாலனத்திற் பல திருத்தங்கள் செய்வ தற்குப் பிரெடெரிக் நோத் (1798—1805) ஆள்பதிக்கு அனுகூலமேற்பட்டது. ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் சென்னையிலிருந்து பெரும்பாலான உத்தியோகத் தரை இலங்கைக்கு அனுப்பியது. இலங்கை குடியேற்ற நாடானதும் நோத் ஆள்பதி இலங்கையிலே ஒரு பொதுப் பரிபாலன சேவைப் பகுதியை (சிவில் சேர்விஸ் பகுதி) ஏற்படுத்தினுர்.

நோத் ஆள்பதியின் பரிபாலனத்திலே 1802ஆம் ஆண்டு பெப்புரவரி மாதம் 8ஆம் திகதி சுப்பிறீம் கோடு எனப்படும் உயர்தர நீதிமன்றம் தாபிக்கப்பட்டது. கொழும்புப் பகுதிக்கு ஒரு டிஸ்திறிக் கோடும் ஏற்படுத்தப் பட்டது. பிரதானமான பட்டணங்களிலே மாகாணக் கோடுகளும் நிறுவப்பட்டன. சிறு கிறிமினல் குற்றங்கள் பொலிசுக் கோடுகளிலே சமாதான நீதிபதிகளால் விசா ரிக்கப்பட்டன. எல்லாக் கோடுகளிலிருந்தும் அக்கோடுக ளின் தீர்ப்புக்கு மாருக மனுச்செய்வதற்கு வசதியாக மேன் முறையீட்டு மன்று (அப்பீல் கோடு) ஏற்படுத்தப்பட்டது.

* Amiens † Crown Colony

ஆங்கில கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆரம்ப ஆட்சிக் காலத்திலே நியமிக்கப்பட்ட இராணுவ ஆள்பதிகள் கல்வி அபிவிருத்தியில் அக்கறை கொண்டாரல்லர். ஆள்பதி நோத் கல்வியை விருத்திசெய்வதற்கு ஊக்கமெடுத்தார். 1801இல் 170 பாடசாலைகள் இருந்தனவாம். இலங்கை அரசாங்கச் செய்தி மடலை 1802ல் பிரசுரித்தார். அதிலே அரசாங்க விடயங்கள் மாத்திரமன்றி அரசியல் சம்பந்தமான விடயங்கள், இலக்கியம், கவிதைகள் முதலியனவும் பிரசுரிக்கப்பட்டன.

நோத் நில அளவைத் திணைக்களம், காணித் திணைக்களம், கல்வித் திணைக்களம், வைத்திய திணைக்களம், தபாற்றிணைக்களம் முதலிய அரசாங்க திணைக்களங்களை ஏற்படுத்தினர். இராசகாரிய முறையை ஒழித்து விளைபொருள்களுக்கு ஒரு வரியை விதித்தார். அரசாங்க உத்தியோகத்தருக்கு வேதனத்துக்குப் பதிலாக நிலம் வழங்கும் 'நிந்தக' முறையை நீக்கி, வேதனம் கொடுக்கும முறையை ஏற்படுத்தினர்.

இலங்கையிலே அம்மைப்பால் கட்டி வைசூரி நோயைத் தடுக்கும் முறையை நோத் 1802இல் ஏற்படுத்தினர்.

1805ஆம் ஆண்டு இலங்கையின் ஆள்பதியாக மெயிட்லண்ட் நியமனம் பெற்றுர். சீர்குலைந்திருந்த பரிபாலனத்தைத் திருத்தியமைப்பதிலே தீவிரமாக ஈடுபட்டார். சிறந்த ஒரு போர்வீரனக இருந்தபோதும் கண்டியைப் பிடிப்பதற்கு நோத் ஆள்பதி யுத்தங்களிலீடுபட்டதுபோல ஈடுபடாது, பொதுப்பரிபாலனத்தைத் திருத்தி அமைப்பதையே முதற் கடமையாகக் கொண்டார். பொதுப்பரிபாலன சேவைப் பகுதி (சிவில் சேர்விஸ்) உத்தியோகத்தரின் சம்பளத்தைக் கூட்டி, ஒய்வுகால வேதனமுறை (பென்சன்) யை ஏற்படுத்தி, அவர்கள் வியாபாரம் முதலிய தொழிலிலீடுபடாது தடுத்து முழுநேரத்தையும் பொதுச் சேவைக்களிக்கும்படி செய்தார். இத்தேசத்தவரின் பாஷையை அவர்கள் நன்ருக அறிந்திருந்தாற்றுன் சனங்களின் தேவைகளை நன்கு அறியலாம்; ஆங்கிலேய உத்தியோகத்தருக்கும் சுதேசிகளுக்கு மிடையிலிருந்து சேவை செய்யும் சுதேச அதிகாரிகளின் அட்டூழியங்களை

அடக்கலாமென உணர்ந்து, சுயபாஷையிலே தேர்ச உள்ளவர்களுக்கு உபகாரங்கள் அளித்தார். கிராமங்கள் தோறும் விதானைமாரை நியமித்தார். ஆள்பதி நோத் நீக்கிய 'இராசகாரிய முறையை' மீண்டும் ஏற்படுத்தினர். கத்தோலிக்கருக்கெதிராக ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை நீக்கினர். கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, திருக்கோணமலை – மட்டக்களப்பு, புத்தளம் – சிலாபம் என்னும் பகுதிகளில் சிவில், கிறிமினல் அதிகாரமுள்ள மாகாணக் கோடுகளை ஏற்படுத்தினர். யூரித் தீர்ப்பு முறையும் இவர் காலத்திலேயே (1811 இல்) முதன்முதலாகக் கிழக்குத் தேசங்களில் இலங்கையிலேற்படுத்தப்பட்டது.

## பயிற்சி

1. போர்த்துக்கீசர் இலங்கையை ஆட்சிசெய்த காலப் பகுதி யாது?
2. இலங்கையிலே ஒல்லாந்தரின் ஆட்சி எப்போது ஒழிந்தது?
3. பேராதனை அரசபரம்பரையின் கடைசிமன்னன் யார்?
4. (அ) கண்டி இராச்சியத்தின்மீது ஆங்கிலேயர் முதன் முதலாகப் படையெடுத்துச் சென்ற ஆண்டு யாது?

   (ஆ) அப்போது கண்டியை ஆட்சி செய்த மன்னன் யார்?

   (இ) படையெழுச்சி தோல்வியுற்றதன் விளைவுகள் யாவை?
5. ஆங்கிலேய வர்த்தக சங்கத்திடம் இலங்கையின் பரிபாலனம் ஒப்படைக்கப்பட்டதற்குரிய காரணங்கள் யாவை?
6. "இரட்டை ஆட்சிமுறை" என்றால் என்ன? இலங்கையிலே ஆங்கிலேயர் ஏற்படுத்திய இரட்டை ஆட்சிமுறையை விபரிக்குக.
7. நோத் ஆள்பதியின் பரிபாலனத்தால் இலங்கை அடைந்த நன்மைகள் யாவை?
8. மெயிட்லண்ட் ஆள்பதியின் பரிபாலனத்தைப்பற்றி யாது அறிவீர்?

## பாடங்கள்: 3, 4

## கண்டி அரசாங்கமும் ஆங்கிலேயரும்

ஆங்கிலேயர் தமது ஆட்சியை இலங்கையில் நிலை நாட்டுவதற்கும் வியாபாரத்தால் அதிக இலாபம் பெறுவதற்கும் கண்டி இராச்சியத்தைத் தமதாட்சியின் கீழ்க் கொண்டுவர நோக்கங் கொண்டனர். இதை விரிவாக ஆராய்வாம்:

கொழும்புக்கும் ஆங்கிலேயரின் பரிபாலனத்திலிருந்த திருக்கோணமலை, யாழ்ப்பாணம், காலி முதலிய இடங்களுக்கும் கண்டி இராச்சியப் பகுதி மூலமே தொடர்பு ஏற்படுத்தவேண்டியதாக இருந்தது. இதுவன்றி இலங்கை முழுவதும் ஆங்கில ஆட்சிக்குட்படின் சுதேச அதிகாரிகள், குருமார் முதலியோரின ஆதிக்கத்தை அடக்கி அவர்களால் இடர் விளையாது ஆட்சியை நடாத்துவதற்கும் வாய்ப்புண்டு. இவ்வகையான அரசியல் காரணங்களுக்கு மாத்திரமன்றி ஆங்கிலேயரின் பொருளாதார விருத்திக்கும் கண்டி இராசசியத்தின் ஆட்சி இன்றியமையாதிருந்தது. கண்டி இராச்சியப் பகுதியில் விளைந்த கறுவா, மிளகு, பாக்கு முதலிய பொருள்களைப் பெற்று இலாபம் பெறலாம். மேலும் கண்டி இராச்சியப் பகுதியின் எல்லைப் புறங்களிலிருந்த தீர்வை வரிகளை நீக்கி வியாபாரத்தால் அதிக இலாபம் பெறலாம்.

19ஆம் நூற்றுண்டுத் தொடக்கத்தில் முக்கியமாக 1802ஆம் ஆண்டு தொடக்கம் 1810ஆம் ஆண்டு வரையும் நெப்போலியன் பொனபார்ட் தனது யுத்தத் திறமையினுல் "ஐரோப்பாவைக் குழப்பிக் கலக்கினுன்." அவன் ஐரோப்பாவை மாத்திரமன்றி உலகம் முழுவதையுமே தனது ஆணையின்கீழ்க் கொண்டுவரவேண்டுமெனக் கற்பனை செய்தான். இந்தியாவிலும் இலங்கையிலுமிருந்த ஆங்கிலேய அதிகாரிகள் நெப்போலியனுல் ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு ஆபத்து ஏற்படக்கூடுமெனத் திகிலடைந்தனர். அக்காலத்திலே இந்தியாவின் ஆள்பதிநாயகமாக

இருந்த *உவெல்லெஸ்லி பிரான்சிய ஆதிக்கத்தை இந்தியாவிலிருந்து ஒழிப்பதற்கு உறுதிகொண்டான். உதாரணமாக: ஐதரபாத்து நிசாமின் படைகள் பிரெஞ்சுக்காரரால் பயிற்றப்பட்டன. பிரெஞ்சு உத்தியோகத்தர் பலர் நிசாமின் சேவையிலிருந்தனர். உவெல்லெஸ்லி, நிசாமை அப்படைகளைக் கலைத்துவிடச் செய்ததுமன்றி உத்தியோகத்தரையும் நீக்கும்படி செய்தான். நிசாமின் இராச்சியத்தின் பாதுகாப்பை ஆங்கிலேய படைகளிடம் ஒப்படைக்கச்செய்து, படைகளின் பராமரிப்புச் செலவையும் நிசாமையே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தான். ஆங்கிலேயரை எதிர்த்து நின்ற மைசூர் மன்னன் திப்பு சுல்தான் ஆங்கிலேயராலே தோற்கடிக்கப்பட்டான். அவனுடைய இராச்சியத்தின் சில பகுதிகள் ஆங்கிலேயருக்காயின. பெரும் பகுதி பழைய இந்து மன்னர் வமிசத்திலுள்ள இளைஞன் ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டது. அப்பகுதி ஆங்கிலேயரின் †"சார் நாடு" போல விளங்கியது. நோத் ஆள்பதியும் உவெல்லெஸ்லியின் கொள்கையைப் பின்பற்றிக் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றத் தீர்மானித்தார். கண்டி மன்னனின் பிரதம அமைச்சனை பிலிமத்தலாவை அதிகாரம் நோத் ஆள்பதியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு உதவியாக விருந்தான். பிலிமத்தலாவை கண்டி அரசனைத் தொலைத்துவிட்டுத் தானே அரசனாகவேண்டுமென அவாக்கொண்டு ஆங்கில ஆள்பதியின் உதவியை நாடினான். அரசனைத் தொலைப்பதற்கு ஆள்பதி இணங்கினாரல்லர். ஆனால், அரசனுடன் ஒப்பந்தம் செய்வதற்காக மக்டோவல் தளபதியைத் தூதனுப்பினார். அவன் 1800 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆம் திகதி கண்டிக்குச் சென்று அரசனைச் சந்தித்தான். அரசன் ஆங்கிலேயருடன் ஒப்பந்தம் செய்வதற்கு மறுத்தனன்.

உடன்படிக்கைமூலம் கண்டி அரசைக் கைப்பற்றச் செய்த முயற்சிகள் கைகூடாததனால் கண்டிமீது படை

---

* Wellesley †Dependency

..டுத்துச் செல்வதற்கு நோத் உறுதிகொண்டார். அதற்குச் சந்தர்ப்பமும் வாய்த்தது. ஆங்கில ஆட்சியின் கீழிருந்த புத்தளப் பகுதியிலிருந்து சில முஸ்லிம்கள் 1802இல் கண்டிக்குச் சென்று வியாபாரஞ்செய்து மீண்டு வரும்போது அவர்கள் கொண்டுவந்த பாக்கைக் கண்டிப் பகுதியிலுள்ளோர் சிலர் கொள்ளையடித்தனர். இது கண்டி மன்னனுக்கும் ஆங்கிலேயருக்குமிடையிற் பகைமையை ஏற்படுத்துவதற்காகப் பிலிமத்தலாவையின் ஏவுதலினுல் நிகழ்ந்தது என்பர். அதையறியாத நோத் ஆள்பதி அதற்கு நட்டஈடு கொடுக்கும்படி கண்டி அரசனைக் கேட்டார். நட்டஈடு கொடுக்கப்படாமையின், நோத் 1803 இல் கண்டிமீது படையெடுத்துச் சென்றுர். கொழும்பிலிருந்து ஒன்றும், திருக்கோணமலையிலிருந்து வேருென்றுமாக இரு படைகள் கண்டியை அடைந்தன. கண்டி அரசஞன ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் நகரை விட்டோடினுன். ஆங்கிலேயர் நகரைப் பிடித்துத் தம்பதேனியாவிலும், மாத்தளைக் கண்மையிலுங் கோட்டைகள் கட்டி முத்துச்சாமி என்பானை அரசஞக நியமித்தனர். காட்டுக் காய்ச்சலாற் பல தளபதிகளும் படை வீரரும் பிடிக்கப்பட்டனராகையால் சிறிய ஒரு படையைக் கண்டியில் விட்டு மீண்டனர். விடப்பட்ட ஆங்கிலப் படைவீரர் பலரும் முத்துச்சாமியும் கண்டியரசனின் படைகளாற் கொல்லப்பட்டனர். ஆங்கிலேயபடைத் தளபதியான டேவி என்பான் சிறைசெய்யப்பட்டான்.

இந்தியாவிலிருந்து பெற்ற படைகளின் உதவியுடன் மீண்டுமொருமுறை கண்டிமீது படையெடுத்துச் செல்ல முயற்சிகள் செய்யப்பட்டு, ஈற்றில் கைவிடப்பட்டன.

நோத் ஆள்பதியின் பின்பு ஆள்பதியாகவிருந்த மெயிற்லண்ட் படைப்பலத்தாலே கண்டியைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபடாது, தமது ஆட்சிக்குட்பட்ட கரையோரப் பகுதிகளில் நேர்மையும் திறமையுமுள்ள பரிபாலன முறைகளை ஏற்படுத்தித் தேசத்தின் செல்வத்தைப் பெருக்கிச் சீரிய நிலைமையை ஏற்படுத்தி, சனங்கள் மனரம்மியமாக வாழ்வதற்கு வழிவகுத்து, அவர்களின்

ஆதரவைப்பெற்று, ஆங்கில ஆட்சியைக் கரை நாடுக… உறுதிப்படுத்தி அவர்களுடைய ஆதரவுடன் கண்டி நாட்டையும் அடிப்படுத்தலாம் என எண்ணினான்.

கண்டி இராச்சியத்தின் ஆட்சியைப் பெறுவதற்குத் தான் வகுத்த திட்டங்கள் பலிக்காததைக் கண்ட பிலிமத் தலாவை அரசனைக் கொலை செய்வதற்குச் சதிசெய்தான். இதையறிந்த அரசன் பிலிமத்தலாவையைச் சிரச்சேதஞ் செய்வித்தான். அவனுக்குப் பதிலாக எகெலப்பொலையை முதலதிகாரியாக நியமித்தான். எகெலப்பொலையும் அரச னுக் கெதிராகச் சதிசெய்து சப்பிரகமுவாப் பகுதியில் ஒரு கலவரத்தைக் கிளப்பினான். இக் கலவரத்தை மொல்லி கொடை அதிகாரம் முறியடித்தான். எகெலப்பொலை ஆங்கி லேயரைச் சரணடைந்தான். அதையறிந்த அரசன் எகெலப்பொலையின் மனைவியையும் பிள்ளைகளையும் உற வினரையும் கொடூரமாகக் கொலை செய்வித்தான். ஏழு கோறளைகளிலுள்ளவர்கள் தனக்கெதிராகக் கலகஞ் செய் தனர் எனக் குற்றஞ்சாட்டி, அவர்களிற் பலரைச் சிரச் சேதஞ் செய்வித்தான். அரசனின் கொடுஞ் செயல்களி னாலே சனங்கள் அவனை வெறுக்கத் தொடங்கினர்.

கண்டி இராச்சியத்திலே நிலவிய குழப்பமான அரசியல் நிலையை அறிந்த ஆங்கிலேய ஆள்பதி பிறௌன் றிக் கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்துச் செல் வதற்குத் தருணம் பார்த்திருந்தான். அவனுக்கு அரிய தொரு தருணம் கிடைத்தது. ஆங்கிலேயரின் பிர தேசத்தில் வசித்த வியாபாரிகள் பதின்மர் கண்டிப் பகுதிக்கு வியாபாரத்துக்காக 1814 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் சென்றபோது, கண்டி அரசனின் அதிகாரிகள் அவர்களை ஒற்றர் எனச் சந்தேகித்துக் கைது செய்தனர். அவர்களுடைய மூக்கு, காது, கரங்கள் முதலியவற்றைத் துண்டித்துத் துன்புறுத்தினர். அவர்களில் எழுவர் இறக்க, எஞ்சிய மூவரும் கொழும்புக்குச் சென்றனர். தனது பிரசைகளுக்கு நேர்ந்த அவமானத்தை அறிந்த ஆள்பதி கண்டிமீது படையெடுத்துச் செல்வதற்கு உறுதி கொண்டான்.

இந்தியாவிலிருந்து பெற்ற படையுதவியுடன் 1815ஆம் ஆண்டு சனவரி மாதம் கொழும்பு, காலி, திருக்கோணமலை, மட்டக்களப்பு, நீர்கொழும்புக் கோட்டைகளிலிருந்து போர்ப்படைகள் கண்டிநோக்கிச் சென்றன. போர்ப் படைகளின் ஒரு பிரிவுடன் பிறௌன்றிக் ஆள்பதியும் சென்றான். மொல்லிகொடை அதிகாரம் தனது ஆதிக்கத்தி லிருந்து நான்கு கோறளைகளை ஆள்பதிக்கு அளித்து அவனிடம் சரணடைந்தான். பெப்புரவரி 14ஆம் திகதி கண்டி நகரை ஆங்கிலேயர் அடைந்தனர். அரசன் நகரை விட்டு ஓடினான். ஆனால், பெப்புரவரி 18ஆம் திகதி எகெலப்பொலையின் ஆட்களால் கைது செய்யப்பட்டுக் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டான். பின்பு அவன் தென் இந்தியாவிலுள்ள வேலூருக்கு அனுப்பப்பட்டான். அங்கே 1832ஆம் ஆண்டு சனவரி மாதம் 30ஆம் திகதி 52ஆம் வயதில் அவன் மரணமடைந்தான்.

கண்டி இராச்சியத்தைப் பிடித்த ஆங்கிலேயர், கண்டிப் பிரதானிகளுடன் 1815ஆம் ஆண்டு மாச்சு மாதம் 2ஆம் திகதி ஓர் உடன்படிக்கையை எழுதினர். அந்த உடன்படிக்கையிலுள்ள பிரதானமான அமிசங்களை வகுத்து அறிவாம்:

1. ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் அரசுரிமையிலிருந்து நீக்கப் பட்டான். நாயக்கவமிசத்தவரின் அரசுரிமை முற்றாக நீக்கப் பட்டு முடிவுற்றது.

2. பிரித்தானிய மன்னர் கண்டி அரசனாக ஏற்கப்பட்டார்.

3. கண்டிப்பிரதானிகளுக்கும் தலைமைக்காரருக்கும் முன்பிருந்த சகல உரிமைகள், சலுகைகள், அதிகாரங்கள் என்பன உறுதி யாக்கப்பட்டன. கண்டியின் பரிபாலனம் முன்பிருந்தது போலவே பிரதானிகள்மூலம் கண்டியரின் சட்டங்களின் படியும் வழமைகளின்படியும் நடாத்தப்படும்.

4. பௌத்த சமயமும் அதற்குரிய கிரியைகள், மதகுருமார், வழி பாட்டிடங்களும் பேணப்படும்; பாதுகாக்கப்படும்.

## பயிற்சி

1. ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைத் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டு வருவதற்கு விரும்பியதற்குரிய காரணங்கள் யாவை?

2. உவெல்லெஸ்லியைப் பற்றி யாது அறிவீர்?

3. சரித்திரக்குறிப்பெழுதுக:

   (அ) திப்புசுல்தான்

   (ஆ) பிலிமத்தலாவை

   (இ) மக்டோவல்

4. நோத் கண்டிமீது படையெடுத்துச் சென்றதற்குரிய உடன் காரணம் யாது?

5. ஆள்பதி பிறெளன்றிக் கண்டிமீது படையெடுத்துச் செல்வதற்கு உதவியாகவிருந்த நிகழ்ச்சி யாது?

6. 1815ஆம் ஆண்டு செய்யப்பட்ட "கண்டி உடன்படிக்கை"யின் பிரதானமான அமிசங்கள் யாவை?

அலகு 2

# 1817—1818

# ஆங்கிலேயரின் ஆதிக்கமும் உள்நாட்டுக் கலகங்களும்

பாடங்கள்: (1) (2) 1817–1818 கலகங்கள்; வீரகெப்பெற்றிப்பொலா

கண்டி அரசாங்கம் 1815ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டதென அறிந்தோம். இரண்டு ஆண்டுகள் கழிவதற்கு முன்பே கண்டி மக்கள் ஆங்கிலேய ஆட்சியில் வெறுப்புற்றனர். வெறுப்புற்றுக் கலகம் விளைத்தனர். இதற்குப் பல காரணங்கள் உள.

ஆங்கிலேயர் கண்டியைப் பிடிப்பதற்குக் கண்டி மக்கள் ஆங்கிலேயரிற் கொண்ட விருப்பினாலன்றி, கண்டி அரசனிலேற்பட்ட வெறுப்பினாலேயே அவர்களுக்குதவியளித்தனர். அரசனுடைய ஆட்சி ஒழிந்ததும் வேறொரு அந்நிய ஆட்சியைக் கண்டனர். அந்த அந்நியர் பல விதமான சட்டங்களையும் ஆக்கினர். துப்பாக்கி, வாள், ஈட்டி போன்ற போர்க் கருவிகளைக் கண்டிக் கச்சேரியில் ஒப்படைக்கும்படி கட்டளையிட்டனர். கண்டி நாட்டுக்குள் செல்லும் பாதைகளில் கடவையிற் சேர்க்கப்பட்ட வரிகளை நீக்கினர். இவற்றால் கண்டிப் பிரதானிகள் தமக்கிருந்த அதிகாரத்தையும் வருமானத்தையும் இழந்தனர். ஆங்கிலேய அதிகாரிகளின் ஆதிக்கத்துக்குட்பட்டவர்களாகக் கண்டனர். அதனாலே பிரதானிகள் ஆங்கிலேயரை வெறுக்கத் தொடங்கினர்.

பௌத்த குருமாரும் ஆங்கிலேய ஆட்சியை விரும்பினார் அல்லர். கண்டி மன்னர் காலத்தில் பிக்குகள் மிகவும் கௌரவிக்கப்பட்டனர். அரசர் விகாரைகளுக்குச் சென்று வழிபட்டனர்; பௌத்த சமய விழாக்களில் பங்குபற்றினர்;

பௌத்த கோயில்களை ஆதரித்தனர். ஆங்கிலே... ஆட்சியின் கீழே பிக்குகள் தமது செல்வாக்கை இழந்தனர். புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்புவதற்கு ஆங்கிலேயர் எடுத்த நடவடிக்கைகளினுல் பௌத்த மதம் பாதிக்கப்படுமென அஞ்சினர். இக்காரணங்களினுல் பிக்குகள் சங்கம் ஆங்கிலேய ஆட்சியை வெறுத்தது; சனங்களுக்கிடையே ஆங்கிலேயருக்கு மாறுகப் பல வதந்திகளைப் பரப்பியது.

சனங்களும் ஆங்கிலேயரை வெறுக்கத் தொடங்கினுர்கள். சப்பிரகமுவா, நான்கு கோறளை போன்ற சில பகுதிகளிலிருந்தோர் கண்டிப் பிரதானிகள் இப்போதும் அதிகாரமுடையவராக இருக்கிருர்களென்று வெறுப்புற்ருர்கள். சில பகுதிகளிலிருந்தோர் கரைநாட்டார் அந்நியரால் ஆட்சி செய்யப்பட்ட காலத்தில் தாம் தொன்றுதொட்டுச் சுதந்திரமாகத் தமது அரசரின் ஆட்சியின் கீழிருந்தவர்களென்று பெருமைப்பட்டார்கள்; இப்போது தாமும் தம் கண்முன்னேயில்லாத அந்நிய அரசனுக்குக் கீழ்பபட்டார்களௌன வெறுப்புக்கொண்டார்கள்.

கண்டிப் பிரதானிகளும் பிக்குகளும் சனங்களும் ஆங்கிலேயரில் வெறுப்புற்று மனம்புழுங்கிக்கொண்டிருந்த வேளையில், “நெருப்பிடை நெய் சொரிந்தாற்போல்” ஒரு சம்பவம் நிகழ்ந்தது. வெல்லாச பகுதியில் சோனகரிலும் பார்க்கச் சிங்களரே தொகையிற் கூடியவராகவிருந்தனர். சோனகர் வியாபாரத்தினுல் செல்வந்தராக விளங்கினர்; சிங்களப் பிரதானிகளுக்கு வரிகள், உபகாரங்கள், கைலஞ்சங்கள் முதலியன கொடுத்துவந்தார்கள். அதனுல் பிரதானிகளுக்கு நல்ல வருமானம் கிடைத்தது. சோனகர் ஆங்கிலேயருக்கு விசுவாசமுள்ளவர்களாக இருந்தார்கள். பிரித்தானிய படைகளுக்கும் பற்பல சேவைகளைப் புரிந்தார்கள். இவற்றிற்குக் கைம்மாருக, சிங்கள திசாவைகளைத் தவிர்த்துத் தமக்கென ஒரு முஸ்லிம் அதிகாரியை நியமிக்கும்படி வேண்டவே, ஹஜ்ஜி மரிக்காயர் என்னும் முஸ்லிம் முகாந்திர

...யமிக்கப்பட்டான். அதனல் சிங்களப் பிரதானி களும் சனங்களும் ஆத்திரமடைந்தனர். அவ்வேளையில், முன்பு புத்தபிக்குவாக இருந்த வில்பாவா என்பவன் துரைச்சாமி என்னும் பொய்ப் பெயருடன் வெல்லாச வுக்குக் கிட்ட உள்ள காட்டில், 1817ஆம் ஆண்டு ஒற்ரூபர் மாதம் தோன்றித் தான் கண்டி அரசனின் உறவினன் எனப் பிரகடனம் செய்து கலகம் விளைத்தான். வெல்லாசப்பகுதிச் சிங்கள திசாவையும், சிங்களரும் துரைச்சாமியை ஆதரித்துக் கலகக்காரரை ஊக்கப்படுத் தினர். அதை அறிந்த வதுளையிலிருந்த ஆங்கில அதி காரி, போலி உரிமைக்காரனைக் கைது செய்யும்படி முஸ் லிம்கள் கொண்ட ஒரு குழுவை ஹஜ்ஜி முகாந்திரத்தின் கீழ் அனுப்பினன். கலகக்காரர் ஹஜ்ஜி முகாந்திரத்தை யும் அவனுடைய ஆட்களையும் கைதுசெய்தனர். அதைக் கேள்வியுற்ற ஆங்கிலேய அதிகாரி ஹஜ்ஜி முகாந்திரத்தை மீட்பதற்குப் போர்வீரர் சிலருடன் சென்ருன். வழி யிலே அவனும் ஆங்கிலேய போர்வீரர் மூவரும் கொலை செய்யப்பட்டனர். கலகம் காட்டுத்தீ போலக் கண்டிப் பகுதி எங்கும் பரவியது. ஊவாப் பகுதியின் திசாவை யாக இருந்த கெப்பெற்றிப்பொலாவைக் கலகத்தை அடக்குமாறு கண்டியிலிருந்து ஆங்கிலேய அதிபதி அனுப் பினன். கெப்பெற்றிப்பொலா ஆங்கிலேயராட்சியின் ஆதிக்கத்திலிருந்து கண்டி அரசாங்கத்தை மீட்பதற்கு அதுவே தருணமென்பதை யுணர்ந்து கலகக்காரரைச் சேர்த்தான். சிங்களரின் அன்பையும், ஆதரவையும் பெற்ற கெப்பெற்றிப்பொலா தானே கலகக்காரருக்குத் தலைமை தாங்கவே கலகம் தீவிரமாகப் பரவியது. ஆங்கி லேயர் கலகத்தை அடக்குவதற்கு ஆயத்தமின்றி இருந் ததுமன்றிக் களனி ஆற்றுப் பெருக்கினலே கொழும்பி லிருந்து உதவி அளிக்க இயலாது மிருந்தனர். இயற்கை அரண் முதலியவற்றின் அநுகூலத்தாலும்; கலகக்காரர் புனித பௌத்த தந்ததாதுவைக் கைப்பற்றியமையின் சனங்கள் அப் புனித சின்னத்தை வைத்திருந்தோரைச் சேர்ந்ததாலும், ஆரம்பத்திலே கலகக்காரர் சித்தி பெற்றனர்.

ஆங்கிலேயர் இந்தியாவிலிருந்து பெற்ற உதவியுட... கலகக்காரரை எதிர்த்துத் தாக்கினர். கண்டிப் பிரதானிகளுக்கிடையில் ஒற்றுமையீனம் ஏற்பட்டது. மொல்லிகொடை அதிகாரம் ஆங்கிலேயருக்குதவி அளித்தான். அதனால் ஆங்கிலேயர் அவனுடைய பிரதேசத்துக்கூடாகக் கொழும்பிலிருந்து கண்டிக்குப் படைகள், ஆயுதங்கள், உணவு முதலியவற்றை அனுப்பினார்கள். ஆங்கிலேயர் கண்டி மக்களின் உணவுப் பொருள்களை அழித்தும், உணவு வெளியிடத்திலிருந்து வராது தடுத்தும், வீடுகளுக்குத் தீமூட்டியும் பலவாருகக் கலகக்காரரை வருத்தினர். இவ்விதம் நிகழும்போது அரசுரிமை கொண்டாடிய துரைச்சாமி அரசுரிமை அற்றவனென்றும் அவன் போலிப் புத்தகுரு வென்றும் கலகக்காரர் அறிந்தனர். முன்பு கலகக்காரர் கைப்பற்றிய புனித பௌத்த தந்த தாதுவை ஆங்கிலேயர் மீண்டும் கைப்பற்றிப் பெரிய விழா நிகழ்த்தித் தலதாமாளிகையில் வைத்தனர். புனித தந்ததாது ஆட்சி உரிமையின் சின்னமாக அக்காலத்தில் விளங்கியது. தந்ததாதுவைக் கைப்பற்றியதால் ஆங்கிலேயருக்கு ஆட்சி உரியதெனச் சனங்கள் நம்பினர். இவற்ருல் கலகக்காரர் கலகத்தைக் கைவிட்டார்கள்.

கெப்பெற்றிப்பொல கைதுசெய்யப்பட்டுச் சிரச்சேதம் செய்யப்பட்டார். எகலெப்பொலே சிறைசெய்யப்பட்டு மொறீஷஸ் தீவிற்கு நாடுகடத்தப்பட்டார். அங்கே அவர் 1829 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம், 56 ஆவது வயதில் இறந்தார். இன்றும் அவருடைய கல்லறையை அங்கே பார்க்கலாம்.

கலகத்தை அடக்கிய ஆள்பதி பிறௌன்றிக் கண்டிப் பிரதானிகளின் செல்வாக்கைப் பெரிதும் குறைத்துக் கண்டி இராச்சியத்தைப் பூரணமாக அடிப்படுத்தி உறுதியாக ஆட்சிசெய்ய விரும்பி, 1815 ஆம் ஆண்டு செய்த கண்டி உடன்படிக்கையிலே பல மாற்றங்களைச் செய்து ஒரு புதிய பிரகடனத்தைப் பல நிபந்தனைகளுடன் வெளியிட்டார். அப் பிரகடனத்திலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம்:

கண்டியின் பரிபாலனமும் அதற்குரிய அதிகாரங்களும், பிரித்தானிய மன்னருக்குரியனவாகின. பிரித்தானிய அரசாங்கத்தின் ஆணையின்பேரில் மாத்திரம் மற்றவர்கள் (அதிகாரிகள் முதலியோர்) அதிகாரம் செலுத்தலாம்.

2. பிரதானிகளுக்கு வேதனமாகப் பணம் கொடுக்கும்முறை ஏற்படுத்தப்பட்டது.

3. பிரதானிகளுக்குரிய அதிகாரம் சட்டத்தினாலே வரையறுக்கப்பட்டது.

4. சனங்கள் பிரதானிகளுக்குச் செலுத்தவேண்டிய மரியாதைகளும், பிரதானிகள் ஆள்பதிக்கும் கண்டி அரசமண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த பிரித்தானிய மன்னரின் படத்துக்குஞ் செலுத்தவேண்டிய மரியாதைகளும் வகுக்கப்பட்டன.

5. கண்டியிலே பௌத்தமதம் மாத்திரமன்றி ஏனைய மதங்களையும் விருத்திசெய்யும் உரிமை வலியுறுத்தப்பட்டது.

## பயிற்சி

1. கண்டிக் கலகத்துக்குரிய காரணங்கள் யாவை?

2. கலகக்காரர் ஆரம்பத்தில் சித்தியடைந்ததற்கும் ஈற்றில் ஆங்கிலேயர் வெற்றிபெற்றதற்குமுரிய காரணங்களை விபரிக்குக.

3. 1818ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பிரகடனத்தின் நிபந்தனைகள் யாவை? இவற்றை 1815ஆம் ஆண்டு செய்யப்பட்ட கண்டி உடன்படிக்கையிலுள்ள அமிசங்களுடன் ஒப்புநோக்குக.

அலகு 3

# 1818—1850 வரை

பாடங்கள் : (1), (2), (3) கோல்புறூக் சீர்திருத்தம்
(4), (5) 1848ஆம் ஆண்டுக் கலகம்

## பாடங்கள் : 1. 2, 3

## கோல்புறூக் சீர்திருத்தம்

இலங்கை 1802 இல் பிரித்தானிய அரசாங்கத்தின் கீழ் ஒரு முடிசார் குடியேற்ற நாடாக்கப்பட்டு, ஆங்கில ஆள்பதியால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. ஒரு சில ஆண்டுகள் தவிர, ஆண்டுதோறும் இலங்கை அரசாங்கத்தின் செலவு, வருமானத்திலும் கூடுதலாக இருந்து வந்தது. உதாரணமாக 1827—1829 ஆண்டுகளின் வருடச் சராசரி வருமானம் 332746 பவுணுகவும் செலவு 378640 பவுணுகவும் இருந்ததெனக் கணிக்கப்பட்டுள்ளது. வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தைச் சமன்படுத்துவதற்குப் பிரித்தானிய அரசாங்கம் நிதி உதவி வந்தது. தமது பணத்தை இலங்கையிற் செலவிடுவதைப் பிரித்தானிய குடியானவன் கண்டித்தான். இதைத் தவிரப் பரிபாலனத்திலும் பல குறைகள் நிலவியதால், இலங்கையிற் குடியேறியிருந்த ஐரோப்பியரின் தூண்டுதலினுலே இங்கிலாந்தில் கிளர்ச்சி ஏற்பட்டது. இக் காரணங்களினுலே இலங்கையின் பொதுப் பரிபாலனம், சட்டங்கள், பிரமாணங்கள் என்பவற்றைப்பற்றி ஆராயவும்; செலவைக் கட்டுப்படுத்தி வருடாந்த வரவு செலவைச் சீர்ப்படுத்துவதற்குரிய வழிவகைகளை வகுப்பதற்கும் சேர் உவில்லியம் கோல்புறூக் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் 1829 ஆம் ஆண்டு ஏப்பிரல் 11ஆம் திகதி இலங்கையை அடைந்தார். அவரைத் தொடர்ந்து சாள்ஸ் ஹே கமரன் என்ற நியாயதுரந்தரர், இலங்கையின்

...ரிபாலனம், நீதிச் சட்டங்கள் சம்பந்தமாக விசாரணை ...செய்யுமாறு நியமிக்கப்பட்டு 1930ஆம் ஆண்டு ஏப்பிரல் ...ாதம் 27ஆந் திகதி இலங்கையைச் சேர்ந்தார்.

அவர்கள் இலங்கையின் நிலையை நன்காராய்ந்து பல சீர்திருத்தங்களைச் செய்வதற்குத் தகவுரைகள் வழங்கினர். அவற்றை அரசியல், நிருவாகச் சீர்திருத்தத் தகவுரைகள்; பொருளாதார சமூகச் சீர்திருத்தத் தகவுரைகள்; கல்விச் சீர்திருத்தத் தகவுரைகள்; நீதிபரிபாலனச் சீர்திருத்தத் தகவுரைகள் என வகுத்து அறிவாம்.

1. அரசியல், நிருவாகச் சீர்திருத்தத் தகவுரைகள் :

(1) கண்டிப்பிரதேசம், கரையோரப்பகுதிகள் எனத் தனித்தனி நிருவாகம் நிலவாது இலங்கை முழுவதிலும் ஓரேவிதமான நிருவாகம் ஆள்பதியினதும் சட்டசபையினதும் பரிபாலனத்தின்கீழ் நிலவ வேண்டும்.

(2) அப்பொழுது இலங்கை 16 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை குறைக்கப்பட்டு யாழ்ப்பாணம், திருக்கோணமலை, கொழும்பு, காலி, கண்டி என்பவற்றைத் தலைநகரங்களாகக் கொண்டு முறையே வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு, மத்திய மாகாணங்கள் என ஐந்து மாகாணங்களாக இலங்கை பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாகாணமும் ஒவ்வோர் அரசாங்க அதிபரின்கீழ் இருக்கவேண்டும். அரசாங்க அதிபருக்குதவியாகச் சுதேசிகளும் ஐரோப்பியரும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) குடியியற் சேவையாளரின் (சிவில் சேர்விஸ் உத்தியோகத்தர்) தொகையும், அவர்களுடைய சம்பளமும் குறைக்கப்படுதல் வேண்டும்; இளைப்பாற்றுச் சம்பளம் (பென்சன்) நீக்கப்படுதல் வேண்டும். குடியியற் சேவையில் ஐரோப்பியர்

மாத்திரமன்றித் தகுதியான இலங்கையரு... வதற்கு உரிமை அளிக்கப்படுதல் வேண்டும்.

(4) ஆள்பதியின் எல்லையில்லாத அதிகாரம் கட்டு... படுத்தப்படல் வேண்டும்.

(5) ஆள்பதிக்கு ஆலோசனை கூறுவதற்கு உத்தியோகப் பற்றற்ற ஆறு அதிகாரிகளைக் கொண்ட ஒரு கரும நிருவாகக் கழகமும் (சட்ட நிருவாக சபை) உத்தியோகப் பற்றுள்ள ஒன்பது அங்கத்தவர்களையும், உத்தியோகப்பற்றற்ற ஆறு அங்கத்தவர்களையுங் கொண்ட சட்டக் கழகமும் (சட்ட நிருபணசபை—பாடத்தின் கீழேயுள்ள அட்டவணையைப் பார்க்குக.) ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

II. பொருளாதார சமூகச் சீர்திருத்தத் தகவுரைகள் :

(1) இலங்கையில் நிலவிய இராசகாரியமுறை நீக்கப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்கத்தின் ஏகபோக வியாபார உரிமை (உ-ம் : கறுவா வியாபார உரிமை) நீக்கப்படுதல் வேண்டும்.

III. கல்விச் சீர்திருத்தத் தகவுரைகள் :

(1) கல்விச்சபை நிறுவப்படுதல் வேண்டும்.

(2) ஆங்கில மொழியே ஆட்சிமொழியாக விருத்தல் வேண்டும். தகுதியற்ற சுயபாஷா பாடசாலைகளை மூடி, ஆங்கிலப் பாடசாலைகளைத் தாபித்தல் வேண்டும். கல்விக்குச் செலவிடப்படும் தொகை அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

IV. நீதிபரிபாலனச் சீர்திருத்தத் தகவுரைகள் :

(1) நீதிபரிபாலனம் நிருவாக அதிகாரிகளின் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டுத் தனிமையாக இருக்க வேண்டும்.

(2) ஒரு பிரதம நீதி அரசரினதும் இரு நீதி அரசரினதும் பொறுப்பின்கீழ் ஒரு உயர்தர நீதிமன்றம் நிறுவப் படுதல் வேண்டும்.

(3) எல்லா நீதிமன்றங்களும் உயர்தர நீதிமன்றத்தின் அதிகாரத்தின் கீழ்ப்பட்டனவாக இருத்தல் வேண்டும்.

(4) மாகாண நீதிமன்றங்கள் ஒழிக்கப்பட்டுப் பெரும் பிரிவு நீதிமன்றங்கள் (டிஸ்திறிக் கோடுகள்) ஏற் படுத்தப்படல் வேண்டும்.

(5) ஐரோப்பியர் இலங்கையர் என்ற பேதமில்லாது எல்லாருக்கும் ஒரேமுறையான நீதி எல்லாக் கோடுகளிலும் வழங்கப்படுதல் வேண்டும்.

(6) இலங்கை முழுவதும் பாகுபாடில்லாது ஒரேவித மான கோடுகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

தகவுரைகளின் விளைவுகள் :

இலங்கையிலே ஒரேதன்மையான நிர்வாகம் ஏற் படுத்தப்பட்டதனுலே பலநூற்றுண்டுகளாக நிலவிய பிரிவினைகள், பாகுபாடுகள், போட்டிகள் என்பன நீங்கி, பிரித்தானிய ஆட்சியின்கீழ் பரிபாலனத்திலும், அரசிய லிலும் ஒன்றுபட்டுத் தேசத்தை விருத்திசெய்யவும், இலங்கையர் என்ற தேசிய இனம் உருவாவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆனுல் கண்டிப்பிரதேசத்தவர் பெரிதும் பாதிக்கப்பட்டனர். கண்டியரின் நிலங்களையும், செல்வத்தையும் ஐரோப்பியர், இந்தியர், கீழ்நாட்டுச் சிங்களர், தமிழர், முஸ்லிம்கள் என்போர் சூறையாடினர். ஐந்து மாகாணங்களாகக் குறைக்கப்பட்டதனுலே கண்டி இராச்சியப்பகுதிக்குரிய பல இடங்கள் மற்றைய மாகா ணங்களுடன் சேர்க்கப்பட்டன. அவ்விடங்கள் தலை நகரங்களிலிருந்து அதிக தூரத்திலிருந்ததால் புறக்கணிக் கப்பட்டன. உதாரணமாக நுவறகலவியா வடமாகாணத்

துடன் சேர்க்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து தொலைவில் இருந்த இப்பகுதி கவனிக்கப்படாததனு. அங்கு மக்கள் நோயினுலும் வறட்சியினுலும் பாதிக்க பட்டு இறக்கின்றனர் என ஸ்கின்னெர் என்பவர் அரசா கத்துக்கு அறிவித்தார்.

தேசாதிபதியின் எல்லையில்லாத அதிகாரம் கட்டுப் படுத்தப்பட்டதனுல் ஏற்பட்ட நன்மைகள் பலவாம். தேசாதிபதிக்கிருந்த அதிகாரத்தின்படி அவர் எப்பிரசை யையும் நாடு கடத்தவும், விசாரணையின்றிச் சிறைவைக் கவும் இயலும். அதனுல் தனிமனிதரின் சுதந்திரம் மறுக் கப்பட்டது. அவருடைய அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்ட தால் மனிதர் சுயாதீனமாகப் பேசவும் எழுதவும் தொடங்கினர். அதனுலே புதினப் பத்திரிகைகள் வெளி யிடப்பட்டன. சட்டசபைகள் தாபிக்கப்பட்டதன் விளை வாகத் தேசாதிபதியின் அதிகாரம் மேலும் குறைக்கப் பட்டதுமன்றி, இலங்கை மக்கள் அரசியலில் பயிற்சி பெற்று இலங்கையில் சனநாயக அரசியலும் பிரதிநிதித்துவ ஆட்சியும் ஏற்பட வாய்ப்புண்டானது. இக்காரணங்கள் இன்று இலங்கை சுதந்திரநாடாக விளங்குவதற்கு வழி வகுத்தன.

இராசகாரியமுறை நீக்கப்பட்டதனுல், சாதிக்கட்டுப் பாடு தளர்ந்தது. ஒவ்வொருவரும் தாம் விரும்பிய தொழிலைச் செய்வதற்கு வாய்ப்பேற்பட்டது. அதனுலே விவசாயமும் வர்த்தகமும் விருத்தியடைந்தன. விவசாயம் வர்த்தகம் விருத்தியடைந்ததனுலே தெருக்கள், புகையிரத வீதிகள் திறக்கப்பட்டன. தபாற்சேவை, வங்கிவசதி முதலியன ஏற்படுத்தப்பட்டன. பிறநாட்டுத் தொடர்புகள் ஏற்பட்டன. ஆனுல் பிரதானிகளினதும் புத்த குருமாரின தும் செல்வாக்குப் பாதிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் ஏகபோக வியாபார உரிமை நீக்கப் பட்டதாலே தனியார் வியாபார விருத்தியும் கோப்பித்

...ங்களின் பெருக்கமும் ஏற்பட்டுப் பொருளாதார ...மாற்றங்கள் உண்டாயின. குடியியற் சேவையிற் செய்த மாற்றங்களினலே இலங்கையரும் அச் சேவையிற் சேர்ந்தனர். குடியியற் சேவை உத்தியோகத்தரே எல்லா அரசாங்க அலுவல்களையும் செய்யாது, வேறு பல அரசாங்கப் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. அரசாங்க உத்தியோகத்திற் சேருவதற்கு ஆங்கிலக் கல்வியைப் பலர் கற்றனர். அதனலே "மத்திய வகுப்பினர்" தோன்றினர். அவர்கள் காலகதியிலே ஆதிக்கம் பெற்று இலங்கை அரசியலிலீடுபட்டு, பல அரசியற்றிருத்தங்களை ஏற்படுத்தி ஈற்றில் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு வழிவகுத்தனர். கோல்புறூக்கின் சிபாரிசுகளைப்பற்றித் தேசாதிபதி பாண்ஸ் குறிப்பிட்டதாவது: "இவை ஈற்றிலே இலங்கை பிரித்தானிய ஆட்சியிலிருந்து பிரிவதற்கு வழி வகுக்கும்." இக்கூற்று மிகவும் பொருத்தமானதாகும். கோல்புறூக்கின் சிபாரிசினல் சிலகாலம் குடியியற் சேவை பாதிக்கப்பட்டது. பென்சன் முறையை நீக்கி வேதனத்தைக் குறைத்ததனல், திறமையுள்ளவர்கள் குடியியற் சேவையிற் சேர முன்வந்திலர். சேர்ந்தவர்களும் கோப்பித் தோட்டங்களை ஏற்படுத்தியும் வியாபாரத்தில் ஈடுபட்டும் பொருளீட்டுவதிலே தமது நேரத்தைச் செலவு செய்து, அரசாங்கக் கடமைகளைச் செவ்வனே செய்யாது காலங்கழித்தனர். அதனலே சாதாரணமான சனங்களின் தேவைகள் கவனிப்பாரற்றுப் புறக்கணிக்கப்பட்டன.

கமரன், நீதிபரிபாலனம் சம்பந்தமாகச் செய்த சிபாரிசுகளினலே ஆள்பதியின் கீழிருந்த நீதிமன்றங்கள் நீக்கப்பட்டன. அதனல் ஆள்பதியின் அதிகாரம் மேலும் குறைக்கப்பட்டது. நீதிபரிபாலனம் நிர்வாகத்திலிருந்து முற்றுகப் பிரிக்கப்பட்டது. அதனலே நீதிபரிபாலனச் சுதந்திரம் பேணப்பட்டது. இலங்கையருக்கும் ஐரோப்பியருக்கும் வெவ்வேறு சட்டமில்லாது ஒரே சட்டமென விதிக்கப்பட்டது. இலங்கை முழுவதிலும் ஒரேதன்மையான நீதிமன்றங்கள் உதயமாயின.

**சட்டக் கழகம்**
**15 அங்கத்தவர்கள்**

- 9 உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவர்கள்
- 6 உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள்
  - 3 ஐரோப்பியர்
  - 1 பறங்கியர்
  - 1 சிங்களர்
  - 1 தமிழர்

## பயிற்சி

1. கோல்புறூக் விசாரணைச் சபை நியமிக்கப்பட்டதற்குரிய காரணங்கள் யாவை?
2. கோல்புறூக் இலங்கையின் பரிபாலனம் சம்பந்தமாகச் செய்த சீர்திருத்தங்கள் யாவை?
3. கோல்புறூக் — கமரன் தகவுரைகளின் விளைவாக இலங்கையிலே நீதிபரிபாலனம் சம்பந்தமாக ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?
4. கோல்புறூக் குழுவினரின் சீர்திருத்தங்களினால் இலங்கையில் ஏற்பட்ட விளைவுகளைச் சுருக்கமாக ஆராய்க.

## பாடங்கள் 4, 5:

# 1848ஆம் ஆண்டுக் கலகம்

கோல்புறூக் செய்த தகவுரைகளைக் கைக்கொண்டு செய்த சீர்திருத்தங்கள் காரணமாகவும்; கண்டிப் பகுதியில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை பரவியதாலும் கண்டி மக்களின் பொருளாதாரமும் கலாச்சாரமும் குன்றின. இதை விரிவாக ஆராய்வாம்.

கிராமங்களிலே நீர்ப்பாசனம், விவசாயம் சம்பந்தமான கருமங்களைக் கன்சபாக்கள் எனப்படும் கிராம சங்கங்கள் மேற்பார்வை செய்து வந்தன. இராசகாரிய முறை மூலம் கருமங்கள் செவ்வனே ஆற்றப்பட்டு வந்தன. கோல்புறூக் தகவுரைகளின் விளைவாக இராசகாரியமுறை ஒழிப்பினாலும் கன்சபா முறையினை நீக்கி நியாயத்தலங்கள் ஏற்படுத்தப்பட்டதனாலும் நீர்ப்பாசனமும் விவசாயமும் பாதிக்கப்பட்டன. அழிந்த கால்வாய்கள், உடைந்த நீரிணைகள், தூர்ந்த குளங்கள் என்பன சீர் செய்யப்படாது நெற்செய்கை குன்றியது. புதிதாகத் தாபிக்கப்பட்ட நீதித்தலங்களிலே நிலம் சம்பந்தமான வழக்குகளைத் தாக்கல் செய்து சனங்கள் தமது பொருளையும் நேரத்தையும் விணாக்கினர். மழையின்மை, நோய்களாற் பீடிப்பு, நீர்ப்பாசன வசதிகளின் சிதைவு, புதிய நீதித் தலங்களிலே வழக்குகள் தாக்கல் செய்ததால் ஏற்பட்ட செலவு, உள்ளூர் வழக்கங்களையும் சட்டங்களையும் அறியாத ஐரோப்பிய நீதிபதிகளின் பிழையான தீர்ப்புகள், புதிய சட்டங்களாலே இலகுவாக நிலங்களைப் பங்கிடு செய்தல், விற்றல் முதலிய காரணங்களால் பொது மக்கள் வறுமையுற்றனர். வறுமைப்பட்ட சனங்கள் அரசாங்கத்தில் வெறுப்புற்றனர்.

வறுமையுற்ற சனங்களின் நிலைபரங்களை அறிய வேணும், அறிந்து அவற்றை நிவிர்த்தி செய்யவேணும் அரசாங்க உத்தியோகத்தர் அக்கறை கொண்டாரல்லர்.

கோல்புறூக் சிபாரிசுகளின் விளைவாகக் குடியியற் ... யின் தரம் குன்றியது. சம்பளத்தைக் குறைத்ததாலு... பென்சன் முறையை நீக்கியதாலும் திறமை மிக்கவர்க... குடியியற் சேவையிற் சேர்ந்தாரல்லர். திறமை குறைந்தவர்கள் சேர்ந்தார்கள். சேர்ந்தவர்களும் கோப்பிச் செய்கையில் ஈடுபட்டுத் தமது நேரத்தின் பெரும்பகுதியைச் செலவு செய்தனர். சுதேச மொழிகளை அறியாததினாலும், கோப்பிச் செய்கையி லீடுபட்டதனால் நேரமின்மையாலும், திறமையின்மையாலும் சனங்களின் தேவைகளை யறியாதும்; அறிந்து புறக்கணித்தும் வந்தார்கள். மேலும் திறமையும் ஊக்கமுமில்லாத இந்த உத்தியோகத்தர் கோல்புறூக் தகவுரைகளினாலே 16 மாகாணங்களிலிருந்து 5 மாகாணங்களாகக் குறைக்கப்பட்ட பெரும் பகுதிகளை நிர்வகிக்கவேண்டியவர்களானார்கள். அதனாலே தலைநகரங்களுக்குத் தொலைவிலுள்ள பகுதிகள் கவனிக்கப்படாது சனங்கள் வறுமையுற்றனர். அக்கால அரசியல் முறையினாலும் சாதாரண சனங்கள் புறக்கணிக்கப்பட்டனர். சட்ட சபையிலுள்ள அங்கத்தவர்கள் பெருந் தோட்டக்காரராகவும் வியாபாரிகளாகவுமிருந்தனர். அவர்கள் பாட்டாளி மக்களின் நலன்களைக் கவனிக்காது தமது பெருந்தோட்டச் செய்கைக்கு வசதிகளைப் பெறுவதற்கு முனைந்தனர். அதனாலே நெற்செய்கை போன்ற உள்ளூர் விவசாயம் குன்றியது. நெல் விளைந்த பகுதிகள் கைவிடப்பட்டன. பாட்டாளி மக்கள் வறுமையுற்றனர். அவர்களின் நிலையை அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்ட ஒருவருமில்லை. பிரதானிகளும் ஏனைய தலைமைக்காரரும் அவர்களின் நிலைமையையும் அவர்கள் அரசாங்கத்தின்மேலுள்ள வெறுப்பையும் அறிந்திருந்தபோதும் அவர்களுடைய அதிகாரத்தையும் மதிப்பையும் அரசாங்கம் மட்டப்படுத்தியதனாலே அவர்களும் ஒருவித அக்கறையுமில்லாதிருந்தனர்.

கோப்பிச் செய்கை போன்ற பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை மலைநாட்டிற் பரவியதன் பயனாகக் கண்டிப் பகுதியார் தமது மேய்ச்சல் நிலங்களையும் சேனைச் செய்கை நிலங்களையும் இழந்தனர். ஐரோப்பியர், இந்தியர், கரைநாட்டுச் சிங்களர், தமிழர் முதலியோர் கண்டிப் பகுதி

...குச் சென்று அம்மக்களைச் சுரண்டினர். பிறருடைய சகவாசத்தால் கண்டிப் பகுதியிலே குடி, கொள்ளை, குற்றம் முதலியன பரவின. பிரதானமாகச் சாராயத் தவறணைகள் பரவியதால் குடிப்பழக்கம் ஏற்பட்டுச் சனங்கள் வறுமைப்பட்டனர்.

வறுமையினுலே பீடிக்கப்பட்டு அரசாங்கத்தில் வெறுப்புற்ற சனங்களின்மீது வருமான வீழ்ச்சியை ஈடு செய்வதற்காக ஆள்பதி டொறிங்டன் துப்பாக்கிவரி, நாய்வரி, வண்டி, தோணி, கப்பல்வரி, தலைவரி எனப் பலவகையான வரிகளை விதித்து முத்திரை வரியைக் கூட்டினுர்.

இவ்வரிகளை எதிர்த்துச் சனங்கள் பகிரங்கக்கூட்டங்கள் நடாத்தினர். துவக்கு வரியை எதிர்த்து 1848ஆம் ஆண்டு யூலைமாதம் கண்டிக்கச்சேரியின் முன்பாகப் பலர் ஆர்ப்பாட்டஞ் செய்தார்கள். சில நாட்களின்பின் ஆயிரக்கணக்கான மக்கள் ஒரு மனுவைச் சமர்ப்பிப்பதற்காகக் கொழும்புக்குச் சென்றனர். ஆள்பதி அவர்களுக்கெதிராகப் பட்டாளத்தை அனுப்பித் தாக்குவித்தார். அதன் விளைவாகப் பல இடங்களிலும் கலகங்கள் ஏற்பட்டன. இக் கலகங்களைப் பெரும் புரட்சி என அரசாங்கம் கருதியது. அதனுலே அரசாங்கம் கொடூரமான இராணுவ நடவடிக்கையெடுத்தது. பல கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. பொருள், பண்டங்கள் சூறையாடப்பட்டன. 200 பேர் சுடப்பட்டனர்; அல்லது தூக்கிலிடப்பட்டனர். பலர் சிறை வைக்கப்பட்டனர். ஒரு புத்தபிக்கு சுடப்பட்டார்.

ஆள்பதியின் கொடுமையான அடக்குமுறைகளை எதிர்த்துக் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு விண்ணப்பித்ததன் பிரகாரம் ஒரு விசாரணைச் சபை இங்கிலாந்திலே ஏற்படுத்தப்பட்டது. விசாரணையின் பேருக ஆள்பதியும், காரியதரிசியும் இங்கிலாந்துக்குத் திருப்பி அழைக்கப்பட்டார்கள்.

துப்பாக்கிவரி, நாய்வரி, கடைவரி முதலிய வரிகள் நீக்கப்பட்டன. இங்கிலாந்திலே றசல்பிரபுவின் மந்திரி

சபை வீழ்ச்சியடைந்தது. அரசாங்கம் பாட்டாளி மக்களின் நலத்தில் அக்கறைகொள்ளத் தொடங்கியது.

1848ஆம் ஆண்டிலேற்பட்ட கலகத்தின் பயனாக இலங்கையில் ஒரு 50 ஆண்டுகேளுக்கேனும் அமைதி நிலவி உள்ளூர் விவசாயம் விருத்தியடைந்தது எனச் சொல்லலாம்.

1848இல் ஏற்பட்ட கலகத்தால் ஆட்சி வர்க்கத்தின் கண்கள் திறபட்டன. அதற்கு முன் ஐரோப்பியரின் நன்மைக்காகவும், கோப்பிச்செய்கையை விருத்தி செய்வதற்காகவும் ஆட்சி நடாத்தப்பட்டது. கலகத்தின் பின் இலங்கைவாசிகளின் நலத்தை விருத்தி செய்து நெற் செய்கையை ஊக்குவித்து அவர்களைத் திருப்திப்படுத்தி ஆட்சிசெய்தல் இன்றியமையாதெனக் கருதப்பட்டது. சேர் ஹென்றி வார்ட் ஆள்பதி சனங்களின் நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான நெற்செய்கையை விருத்தி செய்வதற்கு அம்பாறை, கிறுமி, உறுவக்கைக் குளங்களைத் திருத்துவித்து நீர்ப்பாசன வசதிகளை அமைத்துக் கொடுத்தார். நீர்ப்பாசன வசதிகளைப் பயன்படுத்திக் கல்முனை, மட்டக்களப்பு, அக்கரைப்பற்றுக் கிடையேயுள்ள பகுதிகள் செந்நெற் கழனிகளாக மாற்றமடைந்தன. உவாட் நீர்ப்பாசன வேலைகளைத் திருத்தியமைப்பதற்கான அதிகாரங்களைக் "கன்சபா" க்களுக்கு வழங்கினர்.

சேர் ஹேர்க்குயூலிஸ் றெபின்சன் கன்சபாக்களின் அதிகாரங்களை அதிகரித்ததுமன்றி நீர்ப்பாசன சாதனங்களைச் சீர்ப்படுத்துவதற்கு ஒரு விசாரணைச் சபையையும் ஏற்படுத்தினர். அச்சபை செய்த சிபாரிசுகளைச் சட்டக்கழகம் அங்கீகரித்தது. உவில்லியம் கிறெகரி, றெபின்சன் ஆள்பதியால் திருத்துவதற்குத் தொடங்கப்பட்ட திசமகாருமக் குளத்தைத் திருத்துவித்ததுமன்றி வன்னிப் பகுதியிலும் பல குளங்களைத் திருத்துவித்தார்.

சேர் ஆதர் கோடன், நெற்செய்கையை விருத்தி செய்வதில் ஊக்கமெடுத்தார். இவருடைய காலத்தில் பெருந்தொகையான குளங்களும், வாய்க்கால்களும்

பபது இலட்சம் ரூபா செலவில் பழுதுபார்க்கப்பட்டன ாம். திருத்தப்பட்ட குளங்களில் காலவீவாவும், கந்தளா யும் பிரதானமானவையாகும். சேர் றிஜ்வே பயிர்ச் செய் கைக்குப் போதிய தண்ணீர் வசதி அளிப்பதற்காக நீர்ப் பாய்ச்சற் பகுதியை 1900இல் அமைத்தார். 1900ஆம் ஆண்டிலே 50 இலட்சம் ரூபா நீர்ப்பாய்ச்சற் சாதனங்க ளிற் செலவிடப்பட்டதாம். அதனால் அவருடைய காலத்தில் கிழக்கு மாகாணத்தில் 1,16,000 ஏக்கர் காணியும், திசமகாருமப்பகுதியில் 7,000 ஏக்கர் காணியும், வளவை கங்கைத் திட்டத்தின்கீழ் 10,000 ஏக்கர் காணியும் நீர்ப் பாசனத்துக்குரியனவாக இருந்தனவாம். அவர் கராச்சித் திட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

சேர் ஹென்றி பிளேக் தெதுறு ஓயாத் திட்டத்தை விஸ்தரித்து 12,500 ஏக்கர் நிலத்தை நீர்ப்பாய்ச்சக் கூடியதாகச் செய்தார். விவசாய சங்கங்களை அமைத்தார். சேர் ஹென்றி மக்கலம் காலத்தில் விவசாய விருத்திக் காக அல்லைத் திட்டமும், மினிப்பைத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டன.

### பயிற்சி

1. இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டதனால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

2. கோல்புறாக் சீர்திருத்தத்தால் குடியியற் சேவை பாதிக் கப்பட்டதன் காரணமாகப் பரிபாலனம் எவ்விதம் குன்றியது என ஆராய்க.

3. மலைநாட்டிலே பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை பரவியதனால் ஏற்பட்ட பலாபலன்கள் யாவை?

4. 1848ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட குழப்பத் துக்குரிய உடன் காரணங்கள் யாவை?

5. 1848ஆம் ஆண்டில் ஏற்பட்ட கலகத்தின் விளைவுகள் யாவை?

அலகு 4

# இலங்கையும் உலகமும்

பாடங்கள்: (1), (2), (3), (4) கைத்தொழிற் புரட்சி

**1700**ஆம் ஆண்டிலும் மாந்தரின் சீவியமுறை பண்டைய உரோமர்களினதும் எகித்தியர்களினதும் முறையைப் போன்றிருந்தது. பயிர்செய்தல், சீலை நெசவு செய்தல் முதலியனவும் பண்டைய முறையிலேயே யிருந்தன. தரையிற் குதிரையும் கடலிற் பாய்க்கப்பலுமே அதிகம் வேகமாய்ப் பிரயாணஞ் செய்யக்கூடிய சாதனங்களா யிருந்தன. 18ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் 19ஆம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் இயந்திர சத்திமூலம் தொழில்கள் செய்வதில் பெரும் விருத்தி ஏற்பட்டுத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. இங்கிலாந்திலே நெசவுத் தொழில், சுரங்கத்தொழில், பயிர்த்தொழில், போக்கு வரவு வசதிகள் முதலியவற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இம் மாற்றங்கள் **கைத்தொழிற் புரட்சி** எனச் சொல்லப்பட்டன. பிரதானமான மாற்றங்களைப் பற்றிச் சுருக்கமாக அறிவாம்.

கைத்தொழில் மாற்றங்கள் :

*கே என்பான் 1733இல் [1]பறக்கும் தறியையும் † ஜேம்ஸ் ஹாக்ரீவ் 1764இல் [2]"நூல் நூற்கும் ஜேன்னி" யையும், § இறிச்சாட் ஆக்ரைட் 1769இல் நீர்வலுவை உபயோகித்து நூல்நூற்கும் [3]"நீர்ச் சட்டம்" எனப்படும் இயந்திரத்தையும், ‡ குரேம்ரன் 1779இல் மெல்லிய ஆனால் திண்ணிய நூல் நூற்கும் [4]"மியூல்" இயந்திரத்தை யும், ☾ எட்மண்ட் காட்ரைட் 1785இல் வலுவினால் இயக்கப்படும் [5]வலுத்தறி யையும் கண்டுபிடித்தமையின் புடைவை நெசவில் பெரும் மாற்றமேற்பட்டது. இயந்திரங்கள் மூலம் குறைந்த நேரத்தில் நுண்ணிய திண்ணிய

---

* Kay † James Hargreaves § Richard Arkwright
‡ Crompton ☾ Edmund Cartwright.

1. Flying Shuttle 2. Spinning Jenny 3. Water Frame
4. Mule 5. Power Loom.

டைவைகள் பெருந்தொகையாகச் செய்யப்பட்டு ஆங்கி லய நாட்டுப் புடைவைகள் உலகெலாம் விற்பனே செய் யப்பட்டன.

இயந்திரங்கள் செய்வதற்கு இரும்பும் உருக்கும் தேவைப்பட்டன. இரும்பை உருக்க மரக்கரி உபயோ கிக்கப்பட்டு வந்தது. மரக்கரிக்குப் பதிலாக நிலக்கரியை உபயோகித்து இரும்பை உருக்கி எஃகாக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டமையால் பெரிய திடகாத்திரமான இயந்திரங்கள் செய்யப்பட்டுப் பலவகைத் தொழில்கள் விருத்தியடைந்தன. உருக்குச் செய்யும் முறையைக் கண்டுபிடித்த பெருமை * பெசமர் என்னும் ஆங்கிலே யருக்கும் இங்கிலாந்திலே குடியேறிய †சீமென்ஸ் என்னும் ஜேர்மனியருக்கும் உரியது.

§ யேம்ஸ்வாட் 1769 ஆம் ஆண்டிலே நீராவிவலுவி னுல் இயங்கும் எஞ்சினே அமைத்தார். அதன் பயனுகத் தொழிற்சாலேகளில் நீராவிச்சத்தியினுல் இயந்திரங்கள் இயக்கப்பட்டன. 1814 ஆம் ஆண்டிலே நீராவி இயந் திரங்கள் அச்சிடும் தொழிற்சாலேகளில் உபயோகிக்கப் படவே சாதாரண சனங்களும் வாசித்துப் பயனடையக் கூடியதாகப் புத்தகங்களும் பத்திரிகைகளும் தொகையா கவும் மலிவாகவும் பிரசுரிக்கப்பட்டன. 1825 ஆம் ஆண்டு ( ஜோர்ஜ் ஸ்டிவன்சன் புகையிரத வண்டிகளே இழுத்துச் செல்வதற்கு நீராவி எஞ்சின்களே அமைத்தார். உலகிலே முதன்முதலாக அமைக்கப்பெற்ற முக்கியமான புகையிரதப்பாதை லிவர்பூல்—மாஞ்செஸ்டர் புகையிரதப் பாதை ஆகும். இப்பாதையிலே 1830 ஆம் ஆண்டு ஸ்டிவன்சன் அமைத்த புகையிரத எஞ்சின்கள் ஓடின. புகையிரதப் பாதைகள் திறக்கப்பட்டதாலே கைத்தொழி லும், வியாபாரமும் துரிதமாக முன்னேற்றமடைந்தன. கப்பல்கள்கட்டும் முறையிலும், அவற்றைச் செலுத்தும் முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. 1790 ஆம் ஆண்டில் கப்பல்கள் இரும்பினுல் முதன் முதலாகச் செய்யப்பட்டன. 1812 இல் ‡ ஹென்றி பெல் என்னும்

---

* Bessemer † Siemens § James Walt ( George Stephenson
‡ Henry Bell.

ஆங்கிலேயன் [1]கோமற்று என்னும் நீராவிப் பட...
அமைத்து முதன் முதலாகக் கிளேட் நதியிற் செலுத்தின...
1819ஆம் ஆண்டு [2]சவன்னு என்னும் நீராவிக்கப்பல்
ஜோர்ஜியாவிலிருந்து அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து
லிவர்பூலுக்குச் சென்றது.

1896ஆம்ஆண்டு ஜேர்மனிதேசத்தவரான *டெயிம்லர் பெற்ரேலால் இயங்கும் எஞ்சினையுடைய மோட்டார் காரைச் செய்தார். அவரைத் தொடர்ந்து †ரைட் சகோதரர்கள் 1903ஆம் ஆண்டு ஆகாயவிமானத்தைக் கண்டுபிடித்தனர்.

அமெரிக்க தேசத்தவனுன பிறங்கிளின் மின்சாரச் சத்தியின் இயல்புகளை உலகுக் கெடுத்துக்கூற இத்தாலியரான கல்வாணி, வொல்ரு என்னும் விஞ்ஞானிகள் மின் கல அடுக்கைக் (பற்றறி) கண்டுபிடித்தனர். பரடே மின் பகுப்புச் சம்பந்தமாகச் செய்த ஆராய்ச்சிகளின் பயனுக 1830ஆம் ஆண்டு மின்முலாம் பூசுதல் கண்டுபிடிக்கப்பட்டது. இதனல் இரும்புக்கு நிக்கலால் (Nickel) முலாம் பூசி இரும்பைத் துருப்பிடிக்காமல் பாதுகாக்கலாம். தோமஸ் அல்வா எடிசன் 1879ஆம் ஆண்டில் வெள்ளொளிர்வு மின்விளக்கைக் கண்டுபிடித்ததனுல் வெளிச்சம் ஏற்றும் முறையில் தீவிரமான மாற்றம் ஏற்பட்டது.

செய்திகள் அனுப்புவதிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. பிரித்தனில் ‡உவீட்சன் என்பவரும் அமெரிக்காவில் )மோஸ் என்பவரும் மின்சார சத்தியை உபயோகித்துத் தந்திகள்மூலம் செய்திகள் அனுப்பும் முறையைக் கண்டுபிடிக்க □அலக்ஸான்டர் கிரகாம் பெல் என்பவர் தொலைபன்னியைக் கண்டுபிடித்தார். §மார்க்கோனி என்னும் இத்தாலியர் கம்பிகளின் உதவியின்றித் தந்தியை அனுப்பும் முறையைக் கண்டுபிடித்துக் கப்பல்களிற் செல்

1. Comet 2. Savannah
* Daimler † Wright ‡ Wheatstone ) Morse
□ Alexander Graham Bell § Marconi

...ரும் செய்திகளை அறிவதற்கு வழிவகுத்தார். தந்தி, ...ாலைபன்னி, கம்பியில்லாத் தந்தி என்பவற்றைத் ...தொடர்ந்து பேசும்படம், †தொலைப்பார்வை, கதிரியக்கம் முதலியன கண்டுபிடிக்கப்பட்டு இப்போது அவை உபயோகப்படும் வகையை நாம் அறிவோம்.

வாகனங்கள் இலகுவிற் செல்வதற்காக வீதிகள், தெருக்கள் அமைப்பதிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. *யோன் மக் ஆதம் உடைக்கப்பட்ட கற்களை யிட்டு, உறுதியும் சமதளமுமுடைய தெருக்கள் அமைக்கும் முறையை ஏற்படுத்தினர். இயந்திர உபயோகத்தின் பயனாக நிலத்தைப் பண்படுத்தல், பயிரிடுதல், அறுவடை செய்தல் என்பவற்றில் விருத்தியேற்பட்டது. புதுப் பயிர்கள் உண்டாக்கப்பட்டன.

மாற்றுப் பயிர்ச் செய்கைமுறை கண்டுபிடிக்கப் பட்டது. சுழற்சி முறைப் பயிர்ச் செய்கை கைக்கொள் ளப்பட்டது. இதனால் நிலங்கள் தரிசு நிலமாக விடப் படாது பயிர் செய்யப்பட்டு வந்தன. செல்வந்தர் நிலங் களைக் குறைந்த விலைக்கு வாங்கி அடைத்துப் பெரும் பண்ணைகள் அமைத்தனர். வறியவர்களுடைய கால் நடைகள் மேய்ந்துவந்த புற்றரைகளும் அவர்கள் பயிர் செய்துவந்த சிறுநிலங்களும் செல்வர்களின் பெரும் பண்ணைகளாக மாறியதனால், வறிய கிராமவாசிகள் மேலும் வறுமைப்பட்டனர். பசுக்களை வளர்த்துப் பால் குடிக்கும் பழக்கத்தைக் கைவிட்டு, தேநீர் அருந்தும் புதுப் பழக்கத்தைக் கைக்கொண்டனர்.

கைத்தொழில், போக்குவரவு, பயிர்ச்செய்கை முதலிய வற்றில் மாற்றங்கள் ஏற்பட்டதுமன்றி இம்மாற்றங்கள் ஏற்படுவதற்குத் துணையாக அமைந்த கணிதம், பௌதிக வியல், இரசாயனவியல், உயிரியல் முதலிய விஞ்ஞானப் பிரிவுகளும் முன்னேற்றமடைந்தன.

† Television * John Mc Adam

இப்போது கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட பலாபலன்களை வகுத்தறிவாம்:

(1) குடிசைத்தொழில்களாக நடாத்தபபட்ட கைத் தொழில்கள் இயந்திரங்கள்மூலம் பெரும் தொழிற் சாலைகளில் நடைபெற்றன. அதனால் பல தொழிற் சாலைகள் ஏற்படுத்தப்பட்டன.

(2) தொழிற்சாலைகள் நிறுவப்பட்ட இடங்களில் நகரங் கள் ஏற்பட்டன. சனங்கள் கிராமங்களை விடுத்து நகர்ப்புறங்களுக்குத் தொழில்தேடிச் சென்றனர். அதனால் இங்கிலாந்தின் தென்பகுதியிலிருந்து பலர் வடபகுதியிற் குடியேறினர்.

(3) தொழிற்சாலைகள், சுரங்கங்கள், நிலங்கள் முதலிய வற்றின் சொந்தக்காரர் முதலாளிகள் எனவும அவற்றிலே வேலை செய்வோர் தொழிலாளிகள் எனவுஞ் சொல்லப்பட்டனர். அதனால் முதலாளி, தொழிலாளி என்னும் பிரிவுகளேற்பட்டன.

(4) தொழிலாளர் நீண்டநேர உழைப்பினாலும் குறைந்த கூலியாலும் உறுதியற்ற உழைப்பாலும நலிந்தனர். வாழ்க்கைக்குப் போதுமான வருமான மின்மையால் பெண்களும பிள்ளைகளும் தொழிற் சாலைகளில் வேலைசெய்தார்கள். அவர்களுக்கு ஏற்ற வசதிகளின்மையால் அவர்களின் சுகமும் சீலமும் குன்றின.

(5) சாதாரண மக்கள் தொழிற்சாலையில் செய்யப்பட்ட பொருள்களுடன் தமது கையாற் செய்யப்பட்டவை போட்டியிட முடியாது வறுமைப்பட்டனர்.

(6) இயந்திரங்கள் மூலம் தேவைக்கதிகமாகப் பெருந் தொகையான அளவில் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அப்படிச் செய்யப்பட்டதால் காலத்துக்குக் காலம் தொழிற்சாலைகள் வேலை யின்றி மூடப்படத் தொழிலாளர் வேலையின்மை யாற் கஷ்டப்பட்டனர்.

(7) வியாபாரப் பொருள்களுக்கு விதித்திருந்த பாது காப்புத் தடைகள், கட்டுப்பாடுகள் அகற்றப் பட்டுத் "தடையில்லாத வர்த்தகமுறை" விருத்தி யடைந்தது.

(8) செல்வர், வறியவர்களின் நிலங்களைப் பெற்றுப் பெரும் பண்ணைகளாக அடைத்துப் புதிய முறை கள் மூலம் பெருநிதியீட்ட வறியவர்கள் நிலமின்றி வருந்தினர். நிலமில்லாததனால் முன்போல அவர் கள் பசு வளர்த்துப் பால் குடிக்க இயலாது தேநீர் அருந்தும் புதுப்பழக்கத்தைக் கைக் கொண்டனர்.

(9) தொழிலாளர் கஷ்டங்களை நீக்குவதற்கு வேலை நிறுத்தம், தொழிற்சங்கம் முதலியன ஏற்பட லாயின.

(10) தொழிற்கட்சி என்றொரு புதிய அரசியற்கட்சி உருவானது.

(11) சமதர்மக் கொள்கை நவமாக உதயமானது.

(12) போக்குவரவுச் சாதனங்களின் விருத்தியால் தேசங்களுக்கிடையிலுள்ள "தூரம்" குறைந்து நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

(13) வைத்திய முறையில் விருத்தியேற்பட்டது.

(14) செல்வப் பெருக்கினாலும், மாற்றமடைந்த சூழ் நிலையாலும் கடவுள்பக்தி, சீலம் முதலியன குன்றிய தால் சமுதாய வாழ்க்கையைச் சீர்ப்படுத்த ஒழுங் குக்கொள்கை எனப்படும் மெதடிஸ்ட் (Methodist) இயக்கம், அடிமை ஒழிப்பு இயக்கம் முதலிய இயக்கங்கள் ஏற்பட்டன.

(15) வாழ்க்கைக்குச் சாதகமானவை ஏற்பட்டதுபோல அழிவுக்குரிய பல ஆயுதங்களும் முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டு நட்டங்களும் ஏற்பட்டன.

## பயிற்சி

பின்வருவோர் ஒவ்வொருவரும் கைத்தொழில் விருத்திக்கு எவ்விதம் உதவினர் எனக் கூறுக:

(1) கே (2) ஹாக்ரீவ்
(3) ஆக்ரைட் (4) கார்ட்ரைட்

போக்குவரத்து விருத்திக்குப் பின்வருவோர் எவ்விதம் உதவினர்?

(5) யேம்ஸ்வாட் (6) ஸ்டீவன்சன் (7) டெயிம்லர்
(8) ரைட் (9) மக் ஆதம்

பின்வருவோர் எவ்விதம் உலகப்புகழ் பெற்றனர்?

(10) பரடே (11) மோஸ் (12) எடிசன்
(13) மார்க்கோனி (14) கிரகாம் பெல்
(15) இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியினால் சாதாரண சனங்கள் எவ்விதம் பாதிக்கப்பட்டனர்?

அலகு 5

# இலங்கையும் உலகமும்

பாடங்கள் : (1), (2) பிரான்சு—பிரான்சிய அரசியற் புரட்சியும், ஐரோப்பிய யுத்தங்களும்

(3), (4) பிரான்சிய அரசியற் புரட்சியின் பின் ஐரோப்பா ; நெப்போலியன் போனப்பாட்

## பாடங்கள் : 1, 2.


## பிரான்சு—பிரான்சிய அரசியற் புரட்சியும், ஐரோப்பிய யுத்தங்களும்

வட அமெரிக்காவில் ஏற்பட்ட 13 ஆங்கிலேய குடியேற்ற நாடுகளும் ஆங்கில அரசனுக்கெதிராகப் போர் புரிந்து சுதந்திரம் பெற்று, ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்னும் குடியரசு உதயமானது என்றும் ; அமெரிக்கச் சுதந்திரப்போரிற் பிரான்சியர் ஆங்கிலேயருக்கு மாருக அமெரிக்கருக்கு உதவிசெய்தனர் என்றும் ஏழாம் வகுப்பிற் கற்ரேம். அமெரிக்க சுதந்திரத்தால் பிரான்சியரும் வல்லாட்சி புரிந்த தமது அரசனுக்கெதிராகத் தூண்டப்பட்டனர்.

பிரான்சில் "வரம்பிலா முடியாட்சி" நிலவியது. நாட்டின் நன்மையைக் கருதித் தமது அதிகாரத்தைச் செலுத்தக்கூடிய மன்னரின் கீழ் இவ்வகை ஆட்சி நன்மை பயக்க, அதிகாரஞ் செலுத்த உறுதியில்லாத மன்னர்களின் கீழ் திமை விளைவிக்கும். 14ஆம் லூயி மன்னனுக்குப் பின் ஆட்சிசெய்த மன்னர்கள் ஆட்சித் திறமை அற்றவர்களாக இருந்தனர். 15ஆம் லூயி போகவாழ்க்கையி லீடுபட்டுப் பணத்தை வீணே செலவிட்டானன்றி அரசியற் கருமங்களைக் கவனித்தா

னல்லன். அவன் பின்வந்த 16ஆம் லூயி தன் பிர...
களின் ஆதிக்கத்துக்குட்பட்டு ஒருவித சீர்திருத்தமு...
செய்ய இயலாதவனானான். இவற்றால் ஆதிக்கமுள்ள மேல்வகுப்பினர் சுகபோகங்களை அநுபவிக்கச் சாதாரண மக்கள் பற்பல கஷ்டங்களுக்காளானார்கள்.

அக்காலத்திலே பிரான்சிய சமுதாயத்தில் 1. உயர்தர மத குருமார், 2. பிரபுக்கள், 3. சாதாரண மக்கள் (பட்டண வாசிகள், வியாபாரிகள், உழவர், அடிமைகள் முதலியோர்) என முப்பிரிவுகள் இருந்தன. குருமாரும் பிரபுக்களும் சுகபோகங்களை அநுபவிக்கச் சாதாரண மக்கள் பற்பல வரிகள், சட்டங்கள், கட்டுப்பாடுகள், அட்டூழியங்களுக்காளாக விருந்தனர். அவர்களுடைய வருமானத்தில் 81 வீதம் வரியாகவும், கப்பமாகவும் காணிக்கையாகவும் கொடுக்கப்பட்டது. குடியானவர்களின் தானியங்கள் பிரபுக்களின் வளர்ப்புப் புறுக்களால் அழிக்கப்பட்டன. பிரபுக்கள் வேட்டையாடும் போது மிருகங்களால் பயிர்கள் சேதஞ் செய்யப் பட்டன. இச் சேதங்களையெல்லாம் குடியானவர்கள் முறையீடின்றிப் பொறுக்க வேண்டும்.



உருசோ

சாதாரண குருமார் பல கஷ்டங்களை அநுபவித்தும ஆத்மீகக் கடமைகளைச் செய்துவர, உயர்தர குருமார் ஆத்மீகக் கடமைகளைப் புறக்கணித்து இன்பம் நுகர்ந்தனர். பிரபுக்களின் பிள்ளைகளே பெரும்பாலும் உயர்தர குருமார் பதவிக்கு நியமிக்கப்பட்டார்கள். சாதாரண சனங்கள் காணிவரி, தலைவரி, உப்புவரி, சுங்கவரி,

ஜீருவரத்துவரி முதலிய வரிகளுக்கும் கட்டாய ஊழி யஞ்செதுக்கும் ஆளானுர்கள். சில பகுதிகளில் அவர்கள் தமது வருமானத்தில் 55 வீதத்தை அரசாங்க வரியாகக் கொடுத்தார்கள். இங்கிலேயில் † மொங்தேசுகே § வோல்த் தேயர், * உரூசோ முதலியோர் அக்காலநிலேயைக் கண் டித்துப் பல பிரசுரங்களே வெளியிட்டனர். அவற்றில் புதிய கருத்துக்களேயும் கொள்கைகளேயும் தெளிவாக விளக்கினர். அமெரிக்க சுதந்திரப்போரின் பயனுகவும் பிரான்சிய மக்கள் தைரியம் அடைந்தனர்.

இவ்வித நிலேமைகள் நிலவிய காலத்தில் பணமில் லாது நலிந்த 16 ஆம் லூயி பணம் பெறுவதற்காக, 175 வருடங்களாகக் கூடாதிருந்த பிரான்சிய பாராளுமன்ற மாகிய "பொதுநாட்டுச் சபை"யை 1789 ஆம் ஆண்டு கூட்டினுன். "பொதுநாட்டுச்சபை" பிரபுக்கள், சமய குருமார், பொதுமக்கள் என்னும் முப்பெரும் வகுப்பின ரைக் கொண்டது. ஒவ்வொரு வகுப்பினரும் தனித் தனிச் சபையாகக் கூடினர். பிரபுக்கள் சபையும் குரு மார் சபையும் பெரும்பான்மையும் ஒன்றூடொன்று இணங்கி நடந்தன. அதனுல் பொதுமக்களின் தேவைகள் புறக்கணிக்கப்பட்டன.

1789 இல் பொதுநாட்டுச்சபை கூட்டப்பட்டபோது மூன்று சபைகளும் ஒரே இடத்திற் கூட்டப்பட வேண்டு மென்றும், பாராளுமன்றம் ஒரு தேசியமன்றமாக மாற்றி யமைக்கப்பட வேண்டுமென்றும் கிளர்ச்சி ஏற்பட்டது. அரசனும் அவனேச்சார்ந்த பிரபுக்களும் அதை எதிர்த் தனர். அதுவுமன்றிப் பொதுமக்களேக் கூட்டத்திற்குச் செல்லவிடாது கூட்ட மண்டபத்தின் கதவுகளே அரசன் மூடுவித்தான். அதனுற் சீற்றங்கொண்ட மக்கள் அருகி லிருந்த தெனிஸ் பந்தாட்ட மைதானத்திற் கூடி, பிரான்சுக்கு ஒரு தேசிய அரசியற்றிட்டத்தை அமைப் பதற்கு முன்பு அகல்வதில்லே எனச் சத்தியஞ் செய்தனர்.

† Montesquieu § Voltaire * Rousseau

பின்பு பொதுநாட்டுச்சபை ஒரேயிடத்தில் கூடியது. இப்படிக் கூடிய சபை "தேசிய மன்றம்" ... மாறி முன்னிருந்த ஆட்சிமுறையை ஒழிக்கும் கிளர்ச் சிக்கு வழிகாட்டியது.

பசியால் வாடிய பரிசுநகர மக்கள் மூன்று நாட்க ளாகக் கலகம் விளைத்து 1789ஆம் ஆண்டு யூலைமாதம் 14ஆம் திகதி *பசிதில் சிறைக் கூடத்தைக் கைப்பற்றினர். (பிரான்சியர் இன்றும் யூலை 14ஆம் திகதியைச் சிறந்த தேசிய விடுதலைநாளாகக் கொண்டாடு கின்றனர்.) இச்சிறைச்சாலை அரண் செய்யப்பட்ட ஒரு கோட்டையாகவும் விளங்கியது. இதன் வீழ்ச்சி "வரம் பிலா முடியாட்சி"யின் வீழ்ச்சியைக் குறித்தது. பரிசு நகருக்கு வெளியிலும் குழப்பங்கள் ஏற்பட்டன. கலகக் காரர் பிரபுக்களின் மாளிகைகளைத் தகர்த்தனர். பிரபுக்கள் பலர் பிரான்சைவிட்டு வேறு இடங்களிற் குடியேறினர்.

தேசியமன்றம் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தியது. இச்சீர்திருத்தங்களின் பயனாக விசேட உரிமைகள், மானியமுறை முதலியன நீக்கப்பட்டுப் பிரான்சியர் எல் லோருக்கும் ஒருவகையான வரி விதிக்கப்பட்டது. "மனிதனி னதும் பிரசையினதும் உரிமை அறிக்கை" எனப்படும் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. இதனால் மனிதனின் பேச்சுச் சுதந்திரம், சமய சுதந்திரம், பத்திரிகைச் சுதந் திரம், எவருக்கும் சமநீதி என்பன உறுதிசெய்யப்பட்டன. பிரபுக்களின் பெருந்தோட்டங்கள் சாதாரண சனங் களுக்குப் பிரித்துக்கொடுக்கப்பட்டன. திருச்சபைக்குச் சேர்ந்த நிலங்களைத் தேசிய மன்றம் பறிமுதல் செய்தது. ஈற்றில் 1791ஆம் ஆண்டு தேசியமன்றம் "வரம்பிலா முடியாட்சியை" ஒழித்து "வரம்புடை முடியாட்சியை" ஏற்படுத்தினது. பிரான்சிலுண்டான புரட்சியாலேற்பட்ட மாற்றங்களை அறிந்த ஏனைய ஐரோப்பிய மன்னர் திகி லடைந்தனர். தத்தம் நாடுகளிலும் சனங்கள் தமது சுயேச்சாதிகாரத்தை எதிர்த்துக் கலகஞ் செய்வாரென

* Bastille

...னர். அதனுற் புரட்சிக்காரருக் கெதிராகப் பிரான்
...மீது படையெடுத்துச் செல்லத் தீர்மானித்தனர். இவ்வேளையில் அரசனும், அரசியும் பரிசிலிருந்து, ஒளித்தோடும்போது கைதுசெய்யபப்பட்டு பரிசுக்குக் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் தேசத் துரோகிகளாகக் கருதப்பட்டனர்.

ஆசுத்திரியாவும், பிரசியாவும் 1792ஆம் ஆண்டு பிரான்சின்மீது படையெடுத்தன. பிரான்சியர் படையெழுச்சிக்காரரை வால்மி (Valmy) என்ற இடத்தில் தோற்கடித்தனர். இவ்வெற்றி பரிசுநகரை எட்டிய தினத்தன்று பிரான்சு ஒரு குடியரசு நாடாக 1792ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22ஆந் திகதி பிரகடனஞ் செய்யப்பட்டது. குடியரசுக்கு விரோதமாகச் சதிசெய்தானென அரசன் குற்றஞ்சாட்டப்பட்டு, 1793ஆம் ஆண்டு சனவரி மாதம் சிரச்சேதஞ் செய்யப்பட்டான். அரசன் சிரச்சேதஞ் செய்யப்பட்டதனுல் முன்னரே பிரான்சிய குடியரசுக் கெதிராகப் படையெடுத்துச் சென்ற ஆசுத்திரியா, பிரசியா முதலிய நாடுகளுடன் இங்கிலாந்து, ஒல்லாந்து, இசுப்பானியா, சாடினீயா என்பன சேர்ந்தன. பிரான்சிய படைகள் தோற்கடிக்கப்பட்டுப் புதிய குடியரசு ஒழியும் நிலேயேற்பட்டது. பிரான்சிலும் உள்நாட்டுக் கலகங்கள் ஏற்பட்டன.

மேற்குப் பிரான்சிலுள்ள லாவென்டீ (La Vendee) பகுதியிலுள்ள சனங்கள், அரசன் சிரச்சேதஞ் செய்யப்பட்டதாலும் திருச்சபை தாக்கப்பட்டதாலும் சீற்றங்கொண்டு, குடியாட்சியாளருக் கெதிராக எழுந்தனர். லயன்ஸ், தியூலன் முதலிய பகுதிகளிலுங் குழப்பங்களேற்பட்டன.

இச் சந்தர்ப்பத்தில் ''யக்கோபினர்'' என்ற தீவிரவாதிகள் அதிகாரம் பெற்றனர். இவர்களின் தலேவர்களில் † உரெபெசுபியர் பிரசித்தி பெற்றவர். கலகக்காரர் இரக்கமில்லாது அழிக்கபபடவேண்டுமென்று தீவிர

† Robespierre

வாதிகள் கருதினர். அதற்காகப் பன்னிருவரைக்கொ[illegible] "பொதுசன பாதுகாப்புச் சபை" ஒன்றைத் தாபித்த[illegible] குடியரசுக் கெதிராகச் சந்தேகிக்கப்பட்டவர்கள் இச் சபையால் இரக்கமின்றிச் சிரச்சேதம் செய்யப்பட்டார்கள். பரிஸ் நகரில் 2500பேர்களும் பிரான்சின் ஏனைய பகுதிகளில் 10000 பேர்களும் சிரச்சேதஞ் செய்யப்பட்டார்களெனக் கூறப்படுகிறது. உறெபெசுபியர் காலத்தில் இப் பயங்கர ஆட்சி உச்ச நிலையடைந்தது. சிரச்சேதஞ் செய்யப்பட்டவர்களில் இராணியும் ஒருவராகும். தீவிரவாதிகளுக்கிடையிலேற்பட்ட பகைமையால் உறேபெசுபியர் 1794இல் சிரச்சேதஞ் செய்யப்பட்டான், அவனுடன் பயங்கர ஆட்சியும் விரைவில் ஒழிந்தது.

பிரான்சிய புதிய குடியரசு, படையெழுச்சிக்காரருக் கெதிராகப் படைதிரட்டிப் பயிற்சியளித்துப் போரிடும் பொறுப்பைக் * காணேத் என்னும் மேதாவியிடம் ஒப்படைத்தது. அவன் படைதிரட்டிப் பயிற்சியளித்துச் சிறந்த சேனைத் தலைவர்களை நியமித்துப் பகைவர்களை முறியடித்துப் புகழ் பெற்முன். கீர்த்திவாய்ந்த அவனது சேனைத் தலைவர்களிலே நெப்போலியன் போனப்பாட் சிறப்புடையவன்.

பிரான்சிய அரசியற் புரட்சியின் பயனுகப் பிரான்சிலே:

(1) வரம்புடைய முடியாட்சியும் பின்பு குடியாட்சியும் ஏற்படுத்தப்பட்டு வலிமையும் ஒழுங்கும் திறமையும் உள்ள மத்திய அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டது.

(2) அடிமைத்தனமும் மானிய முறையும் ஒழிக்கப் பட்டன; திருச்சபைக்கும் குருமாருக்கும் பிரபுக்களுக்கும் இருந்த விசேட சலுகைகள் நீக்கப் பட்டன.

(3) சாதாரண சனங்கள்மேல் விதிக்கப்பட்ட கொடூரமான வரிகள் நீக்கப்பட்டன.

* Carnot

பிரபுக்களின் பெருந்தோட்டங்கள் சிறுசிறு கூறுகளாகச் சாதாரண விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டதால் அவர்கள் நிலச்சொந்தக்காரராகி ஊக்கத்துடன் பயிரிட்டனர்.

(5) மனிதனின் பேச்சுச் சுதந்திரம், சமய சுதந்திரம் முதலியனவும் பத்திரிகைகளின் சுதந்திரம், எவருக்கும் சமநீதி என்பனவும் உறுதிசெய்யப்பட்டன.

(6) பிரான்சில் மாத்திரமன்றி ஐரோப்பா எங்கணும் தேசிய உணர்ச்சி விருத்தியடைந்தது.

### பயிற்சி

1. அமெரிக்கச் சுதந்திரப் போர் ஐரோப்பாவில் எவ்விதம் பிரதிபலித்தது ?
2. 18ஆம் நூற்ருண்டின் முற்பகுதியில் பிரான்சில் நிலவிய சமுதாய முறையை விபரமாகக் கூறுக.
3. பிரான்சின் புதிய தேசிய மன்றம் செய்த சீர்திருத்தங்களைத் திருத்தமாகக் கூறுக.
4. பிரான்சிய புரட்சியின் பெறுபேறுகள் யாவை?
5. சரித்திரக் குறிப்பெழுதுக:

   (i) 14ஆம் லூயி (ii) வோல்த்தேயர் (iii) பசிதில்
   (iv) வால்மிப் போர் (v) யக்கோபினர்

பாடங்கள்: 3, 4.

## பிரான்சிய அரசியற் புரட்சியின்பின் ஐரோப்பா; நெப்போலியன் போனப்பாட்

நெப்போலியன் கோசிக்காத் தீவிலே 1769ஆம் ஆண்டு பிறந்தான். 1769இல் கோசிக்கா பிரான்சிற்கு விற்கப்பட்டமையால் நெப்போலியன் பிரான்சிய பிரசையானுன். அவன் பிரான்சிலுள்ள இராணுவ பாடசாலையில் இளமையிற் கற்றுத் தனது 17ஆம் வயதிலே வெடிப்படையில் உபசேனுதிபதியாகச் சேர்ந்தான். 1793இல் தியூலன் முற்றுக்கையில் ஆங்கிலேயரைப் புறங்காட்டச் செய்வதற்குக் காணேத் என்பானுக்கு உறுதுணையாக இருந்தான். 1796இல் பரிசில் கலகமேற்பட்டகாலை, கலகத்தை யடக்கிக் குடியரசைக் காப்பாற்றிப் புகழ்பெற்ருன். அதனுல் சேனுதிபதியாக உயர்வு பெற்ருன். 1796இல் ஆசுத்திரியருக்கெதிராக இத்தாலிக்குப் படையெடுத்துச் சென்று சாடினிய, ஆசுத்திரியப் படைகளை முறியடித்து இத்தாலியிலே மூன்று குடியரசுகளை ஏற்படுத்திஞன். ஆசுத்திரிய மன்னன் இரண்டாம் பிரான்சிஸ் நெப்போலியனுடன் 1797இல் செய்த சமாதான உடன்படிக்கையின்படி

(1) பெல்ஜியம் பிரான்சுக்குரியதாயிற்று.

(2) றைன் நதி பிரான்சின் எல்லையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1790ஆம் ஆண்டு மே மாதம் எகித்துக்குப் படையெடுத்துச் சென்ருன். வழியில் *மோற்ருவைப் பிடித்தான். பிரமிட் போரில் எகித்தியரை முறியடித்தான். அவனுடை வீரத்தையும் திறமையையும் பிரான்சிய புதினப் பத்திரிகைகள் போற்றிப் புகழ்ந்தன.

ஆனுல் நைல்நதிச் சண்டையில் அபூகீர்க்குடாவில் ஆங்கில தளபதி நெல்சன் பிரான்சிய படையை வேர்மூல

* Malta

றன். இத்தருணத்திலே ஆசுத்திரியாவும் இரசி யும் மீண்டும் பிரன்சுக்கெதிராக இங்கிலாந்துடன் ஒப்பந்தம் செய்தன. நெப்போலியன் தன் படையை எகித்தில் விட்டுவிட்டுப் பிரான்சுக்குத் தப்பியோடினன். பிரான்சியர் தமது தேசியவீரனை நெப்போலியனே தமக்குக் கதியென அவனே அடைந்தனர்.

அவன் "கொன்சல்" என்னும் தனித் தலைமைப் பதவியைப் பெற்றுச் சர்வாதிகாரியானன். இதன்பின் பிரான்சுக்கெதிராகப் பொருத்தஞ் செய்த நாடுகளை நோக்கினன். இரசியா ஒப்பந்தத்திலிருந்து விலகியது. 1800இல் ஆசுத்திரியாவை நெப்போலியன் யுத்தத்தில் அடிபணியச் செய்தான்.

1802இல் ஏற்பட்ட எமியன்சு உடன்படிக்கையின் படி இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் சமாதான மேற் பட்டது. இதன்படி இலங்கையிலே ஒல்லாந்தர் ஆட்சிக் குட்பட்ட கரையோரப்பகுதிகள் ஆங்கிலேயருக்குச் சொந்த மாயின என முன்பு (பக்கம் 5) அறிந்தோம். மோற்ரு சம்பந்தமாக 1803இல் மீண்டும் பகையேற்பட்டது. இங்கிலாந்தின்மீது படையெடுத்துச் செல்வதற்கு இரண்டு ஆண்டுகளாக நெப்போலியன் ஆயத்தம் செய்தும் ஆங்கி லக் கால்வாயின் ஆதிக்கத்தைப் பெறமுடியாதவனானன். 1805ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 21 ஆந் திகதி திரபல் கார் போரிலே பிரான்சிய, இசுப்பானிய படைகள் தள பதி நெல்சனுல் அழிக்கப்பட்டன. நெல்சனும் இந்த யுத்தத்தில் உயிர் நீத்தான்.

இதற்கிடையில் பிரான்சிற் கெதிராக ஆசுத்திரியா, இரசியா, சுவீடின் என்பன இங்கிலாந்துடன் மூன்ரும் முறையாக நட்புடன்படிக்கை செய்தன. இதையறிந்த நெப்போலியன் ஆசுத்திரியாவை *அல்ம் என்ற இடத்திலும், ஆசுத்திரியாவையும் இரசியாவையும் ஆஸ்தலிட்சு (1805ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2 ஆந் திகதி) என்ற இடத்திலும் தோற்கடித்தான். இதன்பின

*Ulm

பிரசியப் படையை 1806ஆம் ஆண்டு ஒற்ருேபா சேணு போரிலும் 1807ஆம் ஆண்டு யூன் மாதம் இரசிய படைகளைப் பிரிதிலந்து போரிலும் வெற்றி கொண்டான். தில்சிற்று உடன்படிக்கையின்படி (1807, யூலை) இரசியா பிரான்சுடன் சமாதானமாக, அதன் பகை நாடுகளுக் கெதிராகப் பிரதானமாக இங்கிலாந்துக் கெதிராகச் செய்யும் திட்டங்களை ஆதரிப்பதாக ஒப்புக்கொண்டது. பிரசியாவின் மேற்குப் பகுதி நெப்போலியனின் சகோதரன் ஒருவனுக்கு அளிக்கப்பட்டது.




நெப்போலியன்கால ஐரோப்பா

நெப்போலியன் சிறந்த நாவாய்ப் படை இன்மையால் இங்கிலாந்தின் மீது படையெடுத்து அதை அடிமைப் படுத்த முடியாதெனக் கண்டான். "கடைக்காரச் சாதியா ரான" ஆங்கிலேயரை அவர்களுடைய வர்த்தகத்தை அழிப்பதன்மூலம் பணியச் செய்யலாமெனக் கருதினுன். அதனுல் தனது ஆதிக்கத்துக்குட்பட்ட ஐரோப்பிய துறை முகங்களில் ஆங்கில நாட்டுப் பொருள்கள் இறக்குமதி செய்யக்கூடாதென்று 1806இல் "பேளின் கட்டளைகள்"

தடை விதித்தான். இங்கிலாந்து இதற் கெதிராகப் பிரான்சிய அன்றேல் பிரான்சின் நேசநாடுகளுக்குரிய துறைமுகங்களுடன் வியாபாரம் செய்யக்கூடாதென விதித்தது. இதையறிந்த நெப்போலியன் ஆங்கிலேயத் துறைமுகங்களை அடையும் எத்தேசக் கப்பலும் பிரான்சால் பிடிக்கப்படுமென "மிலன் கட்டளைகள்" மூலம் அறிக்கை செய்தான். நெப்போலியன் விதித்த இக் கட்டளைகள் "ஐரோப்பாக் கண்ட முறை" என்றும் "நெப்போலியனின் பொருள் முறை" என்றும் அறியப்படும். போர்த்துக்கல் நாடு பேனின் கட்டளைகளுக்கு இணங்காது மறுக்க, அந் நாட்டின் மீது படையெடுத்துத் தன் சகோதரன் ஒருவனை அதிகார பீடத்தில் அமர்த்தினன். இசுப்பெயின் தேசத்தரசனை 4ஆம் சாள்ஸ் என்பானுக்கும் அவன் மகனுக்கும் ஏற் பட்ட சச்சரவைப் பயன்படுத்தித் தன் சகோதரன் யோசப் என்பானை இசுப்பானிய அரசனாக்கினன். இதை இசுப்பானிய மக்கள் எதிர்த்துக் கலகஞ்செய்து பிரான்சிய படையைத் தாக்கினர். இங்கிலாந்து இசுப் பானியாவுக்கு உதவியளித்தது. ஆங்கில தளபதி வெலிங்டன் பல வெற்றிகளை ஈட்டிப் பிரான்சுக்குட் புகுந்தான்.

இங்கிலாந்திற் கெதிராக விடுத்த வியாபாரத்தடை சம்பந்தமாக இரசியாவின் மேலேற்பட்ட மனஸ்தாபத் தால் அதன்மீது 1812இல் நெப்போலியன் 5,00,000 வீரருடன் படையெடுத்துச் சென்ருன். இரசியப் படை கள் தந்திரமாகப் புறங்காட்டின. வழியிலிருந்த இடங்கள் அவர்களால் அழிக்கப்பட்டன. நெப்போலியன் மொசுக் கோவைச் செத்தெம்பர் மாதத்தில் அடைந்தான். நகரம் இரசியரால் தீயிடப்பட்டது. மாரி பிறந்தது. நெப்போலியன் குளிராலும் உணவுப்பொருள்களின்றியும் கஷ்டமுற்ருன். இரசியாவிலிருந்து செல்வதுதான் தப்புவதற்கு வழியாக இருந்தது. அவன் தனது படையைக் கைவிட்டு திசெம் பர்மாதம் 5ஆந் திகதி பரிசுக்கோடினன். நெப்போலிய னின் இத்தோல்வி அவனுடைய விரோதிகள் மீண்டும் அவனுக்கெதிராகக் கிளம்புவதற்குத் துணிவை அளித் தது. இரசியா, பிரசியா, ஆசுத்திரியா, சுவீடின்,

இங்கிலாந்து முதலிய தேசங்கள் ஒன்ருகத் ... 3,00,000 போர்வீரருடன் நெப்போலியனுடை 1,85,000 போர்வீரரை 'லிப்சிக்' என்ற இடத்தில் ஒற்ருேபர் மாதம் 1813இல் எதிர்த்து நடாத்திய 'பலசாதிப் போரில்' நெப்போலியன் முறியடிக்கப்பட்டான். அதனுல் 1814இல் எல்பா தீவிற்கு நாடுகடத்தப்பட்டான். ஆனுல் அவன் அங்கிருந்து தப்பியோடி 1815ஆம் ஆண்டு மாச்சு முதலாந்திகதி பிரான்சையடைந்து, படைதிரட்டி ஐரோப்பாவைக் கலங்கவைத்தான். தன்னை எதிர்த்துப் போர்புரிந்த ஆங்கில தளபதி வெலிங்டன் என்பானுல் 1815ஆம் ஆண்டு யூன் 18ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை 'வாட்டஉலூ' யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டு பரிசுக் கோடினுன். அங்கிருந்து *சென் எலனுத் தீவுக்கு நாடுகடத் தப்பட்டு அங்கேயே 1821இல் இறந்தான்.

நெப்போலியன் இரசியா, லீப்சிக், வாட்டஉலூ ஆகிய இடங்களில் நடந்த யுத்தங்களில் தோல்வியடைந்த போதும், அவன் சிறந்த ஒரு இராணுவ வீரனென்பதற் கையமில்லை. போர்வீரர்களைத் தமது தளபதிமேல் விசு வாசமுள்ளவர்களாக ஆக்குவதில் நெப்போலியன் நிக ரற்றவன். சனங்களும் தமது படைத் தலைவனிலே பக்தி விசுவாசமும் தளரா நம்பிக்கையும் உடையவர்களாக இருந்தனர். அதனுற்ருன் நைல்நதிச் சண்டையில் தோல்வியுற்றுப் பிரான்சுக்கோடிச் சென்றபோதும் அவ னைச் சனங்கள் தேசிய வீரனெனக் கொண்டாடினர். எல்பா தீவிலிருந்து பிரான்சுக்கு மீண்டு சென்றதும் படைதிரட்டி யுத்தஞ் செய்தான்.

நெப்போலியன் சிறந்த போர்த்தலைவன் மாத்திர மின்றி ஒப்பற்ற இராசதந்திரியாகவும், அரசியற்றலைவ னுகவும் விளங்கினுன். அவன் அரசியலிலும்; சமயம், கல்வி, நீதி, பொருளாதாரத் துறைகளிலும் பல சீர் திருத்தங்களைச் செய்தான். அவற்றை வகுத்து அறிவாம்.

அரசியற் சீர்திருத்தம்: குலைந்திருந்த அரசியலைச் சீர்ப் படுத்துவதற்குத் தகுதி நோக்கித் திறமையுடைவர்களையே

*St. Helena

...சேவையில் அமர்த்தினன். மத்திய அரசாங்கம் அதிகாரத்துடனும் திறமையுடனும் ஆட்சியை நடாத்த வேண்டுமென்று விரும்பி ஆவன செய்தான். தலதாபன ஆட்சியை மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவந்தான்.

சமயச் சீர்திருத்தம் : கத்தோலிக்க திருச்சபைக்கும் அரசாங்கத்துக்குமிருந்த பகையை ஒழித்துப் பாப்பரசருடன் சமாதானஞ் செய்து, கத்தோலிக்க சமயத்தை அரசாங்க சமயமாக ஏற்று அரசாங்க அதிகாரத்துட்படுத்தினன். அதனல் அவன் தனது ஆட்சியையும் உறுதிப்படுத்தினன்.

கல்விச் சீர்திருத்தம் : ஆரம்ப, உயர்தர கல்வியைச் சீரிய முறையில் விருத்தி செய்தான். பிரான்சிய பல்கலைக் கழகத்தைப் பரிசில் தாபித்து அதன் கிளைகளாக மாகாணங்களில் 17 கழகங்களை ஏற்படுத்தினன்.

நீதித்துறைச் சீர்திருத்தம் : நெப்போலியனின் ஆட்சியால் பெற்ற பெரும் பேறு "நெப்போலியனின் சட்டத்தொகுப்பு" ஆகும். இது பழைய ஆட்சியில் நிலவிய மானிய முறைச் சட்டங்களை ஒழித்துச் சம நீதி, சமத்துவம், சமய சுதந்திரம், மனித சுதந்திரம், என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது.

பொருளாதாரச் சீர்திருத்தம் : விவசாயத்தை விருத்தி செய்தான். பீற்றுக் கிழங்கிலிருந்து சீனியை உற்பத்திசெய்தல் போன்ற பல கைத்தொழில்களை ஆரம்பித்து வைத்தான். வீதிகளையும் கால்வாய்களையும் அமைப்பித்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றை விருத்திசெய்தான். அவன் பிரான்சிய நிதி நிலையத்தைத் ( வங்கிச் சேவையை ) தாபித்தான். தனி மனிதனின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்தான்.

"புரட்சியின் குழந்தையும்", சமத்துவம், சுதந்திரம் என்பவற்றின் தூதுவனுமான நெப்போலியன் அளவு கடந்த அதிகாரம் பெற்றுச் சர்வாதிகாரியாக மாறினன். ஐரோப்பா எங்கணும் தனது ஆட்சியை நிலைநாட்ட

வேண்டுமென்று பேராசை கொண்டான். திர
போரில் ஏற்பட்ட தோல்வியால் தன் விருப்பதை
பூர்த்திசெய்யமுடியாத நெப்போலியன், ஆங்கில நாட்டுப்
பொருள்களை ஐரோப்பாவில் இறக்குமதி செய்வதைத்
தடுத்து 'கடைக்காரச் சாதியரான' ஆங்கிலேயரை அடக்க
முயன்று "பேளின் கட்டளைகள்" எனப்படும் நிபந்தனைகளை
விதித்தான். இது நெப்போலியனுடைய வீழ்ச்சிக்கு வழி
காட்டியது. இங்கிலாந்து, பேளின் கட்டளைக்கு மாருக
நடுநிலைமை நாடுகள் ஆங்கிலக் கப்பல்களுக்குத் தடை
செய்யப்பட்ட துறைமுகங்களுடன் வியாபாரஞ் செய்யக்
கூடாதென விதித்தது. ஆங்கில நாட்டுப் பொருள்கள்
ஐரோப்பாவில் அத்தியாவசியமாகத் தேவைப்பட்டன.
தடை உத்தரவால் பொருள்களின் விலைகள் உயர்ந்தன.
சில தேசங்கள் நெப்போலியனுடைய கட்டளைகளை மீறின.
இரசியா மீறியதனுல் நெப்போலியன் இரசியாமீது படை
யெடுத்துத் தோல்வியுற்ருன். ஏனைய நாடுகளும் அவனுக்
கெதிராகச் சேர்ந்தன.

நெப்போலியனடிப்படுத்திய இடங்களிலே தேசிய
உணர்ச்சி விருத்தியாகி "தேசீய எதிர்ப்பு" என்னும்
மாபெருஞ் சத்தி அவனை எதிர்த்து, இசுப்பானிய தேசத்
தரசனை 1808இல் துரத்தித் தன் சகோதரனை அரசனுக்
கியபோது இசுப்பானிய மக்கள் அவனுக் கெதிராக
எழுந்தனர். *பேய்லன் என்ற இடத்தில் 20,000 பேரைக்
கொண்ட பிரான்சியப் படை இசுப்பானிய கலகக்காரரிடம்
சரண்புகுந்தது. இச்சம்பவமும் தேசிய உணர்ச்சியும்
ஏனைய நாடுகளுக்கும் பரவின.

இச்சம்பவங்களைத் தவிர மதியீனமான வேறு சில
செய்கைகளும் நெப்போலியனுடைய வீழ்ச்சிக்கும் காரண
மாக இருந்தன. பாப்பரசருக்குரிய துறைமுகங்களில்
ஆங்கிலக் கப்பல்கள் தங்காது தடைசெய்யப் பாப்பரசர்
மறுக்க அவரைச் சிறை செய்தான். அதனுல் திருச்
சபையைச் சேர்ந்தோர் நெப்போலியனுக் கெதிராகினர்.
எனவே நெப்போலியனின் வீழ்ச்சிக்கு அவனுடைய

* Bailen

ராசையும், (2) இங்கிலாந்துக் கெதிராக விதித்த டளைகளும், (3) இரசியாவுடன் நிகழ்த்திய போரும், (4) இசுப்பானியாவில் தனது சகோதரனை அரசனுக்கித் தேசிய எதிர்ப்பை ஏற்படுத்தியமையும், (5) பாப்பரசரைச் சிறைசெய்ததால் கத்தோலிக்கரின் பகையை ஏற்படுத்தியமையும் காரணங்களாகும்.

நெப்போலிய யுத்தத்தின் முடிவில் வெற்றிபெற்ற நாடுகள் வீயன்னு நகரில் 1815இல் மகாநாடு ஒன்று கூடி,

(1) வெற்றி பெற்ற நாடுகளுக்கிடையில் சில உரிமை பற்றி ஈடுசெய்யவும்,

(2) ஐரோப்பாவில் சமாதானம் செய்யவும்,

(3) பிரான்ஸ் ஆதிக்கம் பெருமலும் ஏற்பாடுகள் செய்தன.

இம்மகாநாட்டில் ஐரோப்பிய நாடுகள் ஏறக்குறைய எல்லாம் பங்குபற்றினவெனினும் இங்கிலாந்து, இரசியா, ஆசுத்திரியா, பிரான்ஸ் என்பன முக்கியமானவை.

வீயன்னு மகாநாட்டிற் செய்த ஏற்பாடுகள்:

(1) பிரான்ஸின் எல்லைகள் 1792இல் இருந்த எல்லைகளாகக் குறைக்கப்பட்டன.

(2) மோற்ரு, மொறிஷஸ், இலங்கை, கேப்நாடு முதலியவற்றை இங்கிலாந்து பெற்றது. அதனுல் கடலாதிக்கமுடைய தேசமாகத் திகழ்ந்தது.

(3) பெல்சியமும் ஒல்லாந்தும் ஒருதேசமாக இணைக்கப்பட்டன.

(4) டென்மார்க்கிலிருந்து நோர்வே பிரிக்கப்பட்டு சுவீடினுடன் சேர்க்கப்பட்டது.

(5) சுவிட்சர்லாந்து சுதந்திரம் பெற்றது. அதன் "நடுநிலைமை"யை ஏனைய நாடுகள் ஏற்றுக் காப்பாற்ற உறுதி செய்தன.

(6) ஜேர்மனியிலிருந்த 300க்கு மேற்பட்ட சிற
39 ஆக்கப்பட்டு ஆசுத்திரிய அதிகாரத்துக
கீழ்ப்பட்ட "கூட்டரசுச் சபை" (Federal Dict.)
யின் பரிபாலனத்துக்குக் கீழ் கொண்டுவரப்
பட்டன.

(7) போலந்தின் பெரும்பகுதி "வார்சோ பெரும் சிற்றரசு" (Grand Duchy of Warsaw) பின்லாந்து என்பவற்றை இரசியா பெற்றது.

(8) வெனீசியா, லொம்பாடி என்பவற்றை ஆசுத்திரியா பெற்றது.

## பயிற்சி

1. ஏமியன்சு உடன்படிக்கையைப் பற்றி யாது அறிவீர்?

2. சரித்திரக் குறிப்பு எழுதுக: (அ) திரபல்கார் போர், (ஆ) சேனுயுத்தம், (இ) வீயன்னு மகாநாடு.

3. நெப்போலியன் போனப்பாட் செய்த (அ) அரசியற் சீர்திருத்தம், (ஆ) நீதித்துறைச் சீர்திருத்தம், (இ) பொருளாதாரச் சீாதிருத்தம் என்பவற்றைப்பற்றி யாது அறிவீர்?

4. நெப்போலியன் போனப்பாட்டின் வீழ்ச்சிக்குரிய காரணங்கள் யாவை?

அலகு 6

# இந்தியா

முதலாவது எலிசபெத் மகாராணியின் ஆட்சிக்காலத்தில் கிழக்கிந்திய வர்த்தக சங்கம் தாபிக்கப்பட்டதென்றும், 1608ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்து ஜகாங்கிர் சக்கரவர்த்தியிடம் வியாபார உரிமை பெற்றனர் என்றும், தமக்குப் போட்டியாக இருந்த பிரான்சியரை ஏழாண்டுப்போரில் முறியடித்து அவர்களின் ஆதிக்கத்தைச் சிதைத்து, ஆங்கிலேயக் கடற்படையின் வலிமையையும் இந்திய சுதேசமன்னர்களின் ஆட்சிப் பலவீனத்தைப் பயன்படுத்தி இந்தியாவிலே தமது ஆட்சியையும் ஏற்படுத்தினரென்றும் ஏழாந்தரத்திற் (அலகு 19—பாடம் 1) படித்தோம்.

இலங்கையை ஆட்சிசெய்த ஆங்கிலேய ஆள்பதிநாயகங்களில் முதன்முதலாக ஆட்சிசெய்த நோத் அக்காலத்திலே இந்தியாவின் ஆள்பதிநாயகமாக இருந்த உவெல்லெஸ்லி என்பவரின் கொள்கையைப் பின்பற்றிக் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றச் செய்த முயற்சிகளைப் பற்றியும்; உவெல்லெஸ்லி இந்தியாவிலே பிரான்சிய ஆதிக்கத்தை ஒழித்து ஆங்கிலேய ஆட்சியை ஏற்படுத்துவதற்குக் கைக்கொண்ட முறைகளைப்பற்றியும் (இந்நூலில் அலகு 1—பாடங்கள் 3, 4—பக்கம் 1, 9) அறிந்தோம். உவெல்லெஸ்லி ஐதராபாத்து, மைசூர் இராச்சியம் முதலியவற்றில் ஆங்கிலேய ஆதிக்கத்தை நிலைநாட்டியதுமன்றி மராத்தியரின் ஆதிக்கத்தையும் சிதைத்தார். தில்லியைக் கைப்பற்றி மோகல் பேரரசனையும் ஆங்கிலேய ஆட்சிக்கு உட்படுத்தினர். "ஏழாண்டுக்குள் தில்லியிலிருந்து கல்கத்தா வரையும், கல்கத்தாவிலிருந்து குமரிமுனை வரையும்" உவெல்லெஸ்லி பிரித்தானியா பேரரசின் ஆதிக்கத்தைப் பரப்பினர் என வரலாற்றுப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளனர்.

உவெல்லெஸ்லி பிரபுக்குப் பின்பு ஆள்பதிநாய களாக இருந்த கார்ன்வாலிஸ் பிரபு, மின்டோ பிரபு ஆகிய இருவரும் இந்திய அரசியல் விடயங்களிலே தலையிடாது சமாதானக் கொள்கையைப் பின்பற்றினர். அதனால் ஆங்கிலேயருக்குப் பல தொல்லைகள், முக்கியமாக மராத்தி யரால் ஏற்பட்டன.

1813ஆம் ஆண்டு ஹேஸ்டிங்ஸ் பிரபு இந்தியாவின் ஆள்பதி நாயகமாக நியமிக்கப்பட்டார். அவர் உவெல் லெஸ்லியின் கொள்கையைப் பின்பற்றி நேபாள தேசத்து வீரகூர்க்கர்களை வெற்றிகொண்டு அவர்களுடைய பிர தேசத்திற் சில பகுதிகளைப் பெற்று அவர்களுடன் ஓர் உடன்படிக்கையும் செய்தார். அதன்பின்பு கூர்க்கர்கள் பல போர்களிலே ஆங்கிலேயருக்கு உதவிசெய்து வெற்றி ஈட்டினர். ஹேஸ்டிங்ஸ் பிரபு மராத்தியரை முற்றாக முறியடித்து அவர்களின் ஆதிக்கத்தை அழித்தார். அவர்களுடைய பிரதேசங்களிலிருந்து பம்பாய் மாகா ணத்தை நிறுவினர். இராசபுத்தான மன்னர்களுடன் உடன்படிக்கை செய்தார். சிங்கப்பூர் நகரை நிருமாணித்த பெருமை ஹேஸ்டிங்ஸ் பிரபுவுக்கே உரியது.

1848இல் டல்கௌசி பிரபு இந்தியாவின் ஆள்பதி நாயகமாகப் பதவியேற்று பர்மா, பஞ்சாப், அயோத்தி நாட்டை ஆங்கிலேய ஆட்சியின்கிழ்க் கொண்டுவந்தார். அவர் இந்தியாவின் முன்னேற்றத்துக்காக ஏற்படுத்திய சேவைகள் பலவாம். அவர் பெரும் வீதிகளையும் புகை யிரதப் பாதைகளையும் அமைத்தார். தந்திச்சேவையை ஏற் படுத்தினர். கல்வியை அபிவிருத்தி செய்தார். இவை யன்றிப் பல சமூகச் சீர்திருத்தங்களையுஞ் செய்தார். இந்துக் கைம்பெண்கள் மீண்டும் விவாகஞ்செய்யக்கூடா தென்ற வழக்கத்தை ஒழித்து அவர்கள் விவாகஞ் செய்யலாமெனச் சட்டமியற்றினர். இந்துசமயத்தவ னொருவன் கிறித்தவனாக மதம்மாறின் அவனுடைய குடும்பச் சொத்துக்கள் அவனுக்குரிமையில்லையென்ற வழக்கத்தை ஒழித்து அதற்கு மாறாகக் கிறித்தவனாக மதம் மாறியவனுக்குச் சொத்துரிமை வழங்கி விசேட

...லைகளும் அளித்தார். இச்சீர்திருத்தங்களையும் முன்னேற்றங்களையும் அக்கால இந்தியர் சமுசயத்துடன் நோக்கினர்; சாதிக்கட்டுப்பாட்டைக் குலைத்து, இந்து சமயத்தை ஒழித்துக் கிறித்தவ சமயத்தைப் பரப்புவதற்குக் கைக்கொள்ளும் முயற்சிகள் எனக் கருதினர். புகையிரதச்சேவை ஏற்பட்டதால் புகையிரதப் பெட்டிகளில் வித்தியாசத்தைப் பாராது எல்லோரும் சமமாகப் பிரயாணஞ் செய்யவேண்டியிருந்தது. தந்திக்கம்பிகளிலேற்படும் ஓசையை மாந்திரிகம் என நம்பித் தந்திக் கம்பிகளைப் பற்றிப் பொதுசனங்கள் மாறுன எண்ணங் கொண்டனர். இந்நிலைமையிலே படைவீரர்களுக்குப் புது வகையான துப்பாக்கிகள் கொடுக்கப்பட்டன. அவற்றை உபயோகிப்பதற்குக் கொழுப்புப் பூசப்பட்ட தோட்டாக்கள் கொடுக்கப்பட்டன. இத்தோட்டாக்களைக் கடித்துத் துப்பாக்கியில் உபயோகிக்கவேண்டியிருந்தது. கொழுப்பிலே மாட்டுக்கொழுப்பும் பன்றிக்கொழுப்பும் சேர்க்கப்பட்டுள்ளதென ஒரு வதந்தி பரந்து இந்து முஸ்லிம் படைவீரர் ஆத்திரங்கொண்டனர். மீரட்டில் 1857ஆம் ஆண்டு மே மாதம் 10ஆந் திகதி படைவீரர் கலகஞ் செய்து அகப்பட்ட ஆங்கிலேயர் எல்லோரையுஞ் சுட்டுக் கொன்று தில்லிக்குச் சென்றனர். அங்கேயுள்ள இந்தியப் படைவீரர்களும் அவர்களைச் சேர்ந்து தில்லியைப் பிடித்தனர். அக்காலத்திலே ஆள்பதிநாயகமாக இருந்த கணிங்கு பிரபு (Lord Canning) இலங்கை, பர்மா முதலிய தேசங்களிலும் இந்தியாவின் பற்பல பகுதிகளிலும் பெற்ற படை உதவியுடன் கலகக்காரரை முறியடித்துத் தில்லியைச் செத்தெம்பர் 14ஆந் திகதி மீட்டார்.

இக் கலகம் போர்ப்படையிலுள்ள சிப்பாய்கள் செய்த கலகமாதலால் "சிப்பாய்க் கலகம்" எனப்படும். இதன் காரணங்களை மீண்டும் வகுத்தறிவாம்.

**காரணங்கள் :**

1. அரசியல் சம்பந்தமானவை: டல்ஹௌசிப் பிரபு பல இடங்களை வெற்றிகொண்டும் சுதேசமன்னர்களின் நாடுகளை அபகரித்தும் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்படுத்திய

தாலும், முகலாய சக்கரவர்த்தியைத் தில்லி மாளிகையிலிருந்து அகற்றியதாலும், சனங்கள் ஆங்கில ஆட்சியில் வெறுப்புக்கொண்டனர். இவையன்றிச் சுதேச மன்னர்களின் கீழே பலர் சேவித்துச் சீவித்தனர். மன்னரின் நாடுகள் அபகரிக்கப்பட அவர்கள் தமது சீவியத்துக்கு வழியின்மையால் ஆங்கிலரை வெறுத்தனர்.

2. இராணுவம் சம்பந்தமானவை: இந்தியாவுக்கு வெளியிலேற்பட்ட போர்களிலீடுபட்டபோது சுதேசப் போர் வீரர் தமது சமய, சமூக ஆசாரங்களைக் கைக்கொள்வதற்கும் வேறு பல வழிகளிலும் கஷ்டமுற்றார்கள். அக் காரணங்களால் அவர்கள் ஆட்சியாளருக் கெதிராகக் கலகஞ் செய்தனர். படைகளிலும் ஐரோப்பியர் மிகவும் குறைவாக இருந்தமையின் சுதேசிகளை அடக்கப் போதிய உயர்தர ஐரோப்பிய உத்தியோகத்தரிருந்திலர்.

3. சமய சமூக சம்பந்தமானவை: இந்தியாவில் நிலவி வந்த சதி, சிசுக்கொலைகளைத் தடைசெய்தமையாலும் விதவைகள் விவாகத்தை அநுமதித்ததாலும் சில கிறித்தவ மிசனரிமாரின் கொடிய செய்கைகளாலும் கிறித்தவர்களாக மதம்மாறிய இந்துக்களுக்கு அளித்த சலுகைகளாலும் சனங்கள் ஆங்கிலேயரை மேன்மேலும் வெறுத்தனர். பெண்கள் கல்விமுறை, புகையிரதவீதிகள், தந்திமுறைகள் ஏற்படுத்தப்பட்டதாலும் சனங்கள் தம் பழைய பழக்க வழக்கங்களையும் சமயக் கொள்கைகளையும் அழிப்பதற்கு ஆங்கிலேயர் வழிவகைகள் வகுக்கின்றார்களெனக் கருதி அவர்களை வெறுத்தனர். படைவீரருக்குக் கொழுப்புப் பூசப்பட்ட தோட்டாக்கள் அளிக்கப்பட்டன. பசுவினதும் பன்றியினதும் கொழுப்பெனக் கருதி இந்து, முஸ்லிம் போர்வீரர் அவற்றை உபயோகிக்க மறுத்தனர். இக்காரணங்களால் 1857ஆம் ஆண்டு

... மாதம் 29 ஆந் திகதி மங்கல் பாண்டி என்னும் சிப்பாய் ஒரு ஐரோப்பிய உத்தியோகத்தனைக் கொலை செய்யக் கலகம் ஆரம்பமானது.

இக்கலத்தின் பலாபலன்கள் :

1. இதுவரையும் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் பரிபாலனத்தின் கீழிருந்த இந்திய இராச்சியம் பிரிட்டிஷ் பேரரசின் நேராளுகையின் கீழே கொண்டு வரப்பட்டு விக்ரோறியா இராணி 1817 இல் இந்திய பேரரசியாகப் பிரகடனஞ் செய்யப்பட்டார்.

2. 1858ஆம் ஆண்டு ஒகத்து 2 ஆந் திகதி நிறை வேற்றப்பட்ட இந்திய அரசாங்கச் சட்டம் என்னும் சட்டத் தின்படி 15 பேர்களைக்கொண்ட ஒரு சபையின் உதவி யுடன் இந்தியா மந்திரி (Secretary of State for India) அரசரின் பேரில் இந்தியாவை ஆட்சி செய்வாரென விதிக்கப்பட்டது.

3. இந்தியப்படை திருத்தியமைக்கப்பட்டது. பிரிட்டி ஷார் முன்னரிலும் தொகையாகப் படைகளில் நியமிக்கப் பட்டார்கள்.

4. இந்தியாவில் தேசிய இயக்கத்துக்கு இச் சிப்பாய்க்கலகம் வழிகாட்டியது.

## பயிற்சி

1. உவெல்லெஸ்லி இந்தியாவிலே ஆங்கிலேய ஆதிக்கத்தை எவ்வெவ் வழிகளிற் பரவச்செய்தார் ?

2. டல்ஹவுஸி இந்தியாவிலே செய்த சீர்திருத்தங்களைப் பற்றி யாது அறிவீர்?

3. சிப்பாய்க் கலகத்தின் : (அ) காரணங்கள் யாவை? (ஆ) பலாபலன்கள் யாவை ?

## மாதிரி வினுப்பத்திரம் — முதலாம் பருவ...

I. சுருக்கமான விடை எழுதுக:

1. ஆங்கிலேயர் முதன்முதலாகக் கண்டி இராச்சியத்தின் மீது படையெடுத்துச் சென்றபோது அதை ஆட்சி செய்த மன்னன் யார்?

2. அம்மைப்பால் கட்டும் முறையை இலங்கையில் ஏற்படுத்திய ஆள்பதி யார்?

3. யூரித்தீர்ப்பு முறையை இலங்கையில் ஏற்படுத்திய ஆள்பதி யார்?

4. கண்டி இராச்சியத்தின் மன்னன் யார்?

5. இலங்கை எப்போது முடிசார் குடியேற்ற நாடாக்கப் பட்டது?

6. கோல்புறூக் தகவுரைகளின்படி ஏற்படுத்தப்பட்ட அரசியற் பரிபாலன சபைகள் யாவை?

7. 1848ஆம் ஆண்டு கலகத்தின்போது இலங்கையின் ஆள்பதியாக இருந்தவர் யார்?

8. வலுத்தறியைக் கண்டுபிடித்தவர் யார்?

9. கம்பிஇல்லாத் தந்தியைக் கண்டுபிடித்தவர் யார்?

10. திரபல்கார் போரிலே உயிர் நீத்த தளபதி யார்?

II. சரியான விடையின் கீழே கீறிடுக:

1. 1803ஆம் ஆண்டு நிகழ்ந்த கண்டிப் படையெழுச்சியில்:

(அ) ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்

(ஆ) ஆங்கிலேயர் தோல்வியுற்றனர்

(இ) ஆங்கிலேயரும் கண்டியரசனும் சமாதான உடன் படிக்கை செய்தனர்.

ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சிசெய்யத் தொடங்கிய காலத்தில் :

(அ) இரட்டை ஆட்சிமுறை நிலவியது

(ஆ) ஆங்கில மன்னனின் நேர்ஆட்சி நிலவியது

(இ) சட்டக் கழகத்தின் ஆட்சி நிலவியது

3. இராசகாரியமுறையை நீக்கியவர் :

(அ) மெயிட்லன்ட்

(ஆ) நோத்

(இ) பாண்ஸ்

4. 1875ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி :

(அ) பிரித்தானிய மன்னர் கண்டியரசனாக ஏற்கப் பட்டார்

(ஆ) ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனுடைய வமிசத்தார் அரசுரிமை பெற்றனர்

(இ) பிலிமத்தலாவையின் அரசுரிமை உறுதி செய்யப் பட்டது

5. கோல்புறூக்கின் தகவுரைகளின்படி இலங்கை :

(அ) ஒன்பது மாகாணங்களாகப் பிரிககப்பட்டது

(ஆ) பதினாறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது

(இ) ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது

6. கமரன் செய்த தகவுரைகளின்படி :

(அ) மாகாண நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன

(ஆ) பெரும்பிரிவு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன

(இ) எல்லா நீதிமன்றங்களும் ஆள்பதியின் அதிகாரத் தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன

7. இலங்கையிலே முதன்முதலாக ஏற்படுத்தப்பட... கழக அங்கத்தவரின் தொகை :

(அ) 9 (ஆ) 15 (இ) 6

8. பெற்ரோலால் இயங்கும் மோட்டார் காரை முதன்முதல் செய்தவர் :

(அ) பரடே (இ) ரைட் சகோதரர்கள்

(ஆ) டெயிம்லர்

9. 18 ஆம் நூற்றுண்டில் பிரான்சில் நிலவிய அரசியல், சமூக முறைகளைக் கண்டித்து எழுதியவர் :

(அ) 15ஆம் லூயி (இ) உரூசோ

(ஆ) கானேற்

10. அபூகிர்க்குடாப் போரில் :

(அ) பிரான்சிய படை தோல்வியுற்றது

(ஆ) ஆங்கிலேய படை தோல்வியுற்றது

(இ) நெல்சன் கொல்லப்பட்டான்

III. அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ள மிகப் பொருத்த மான சொல்லைத் தெரிந்து வெற்றிடங்களை நிரப்புக :

1. ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனின் அரண்மனையிலே :

..............................

(சிங்கள அதிகாரிகளின், நாயக்க வமிசத்தவர் களின், ஆங்கிலேயரின்) செல்வாக்கு நிலவியது

2. வெல்லாசப் பகுதிக்கு : ..............................

(துரைச்சாமி, கெப்பெற்றிப்பொலா, ஹஜ்ஜி மரிக்காயர்) முகாந்திரமாக நியமிக்கப்பட்டாா.

கோல்புறூக் தகவுரைகளின்படி ஆள்பதியின் அதிகாரம் : ........................................

( கூட்டப்பட்டது, நீக்கப்பட்டது, கட்டுப்படுத்தப்பட்டது )

4. 1848 ஆம் ஆண்டுக் கலகத்தின் காரணம் :

........................................

( டொறிங்டனின் வரிகள், வில்பாவா என்பவனின் கிளர்ச்சி, பிலிமத்தலாவையின் சூழ்ச்சி)

5. மோஸ் புதிதாகப் புனைந்தது........................................

(தொலைபன்னி, தந்தி, தொலைப்பார்வை)

6. கைத்தொழிற் புரட்சியினால் இங்கிலாந்தின் :

........................................

(வடபகுதியில், தென்பகுதியில், கிழக்குப் பகுதியில்) பலர் குடியேறினர்.

7. பிரான்சிய அரசியற் புரட்சியின் பயனாகப் பிரான்சிலே

........................................

(மன்னர் ஆட்சி, கட்டுப்பாடில்லாத சர்வாதிகாரம், குடியாட்சி) ஏற்படுத்தப்பட்டது.

8. நெப்போலியன் பேளின் கட்டளைகள்மூலம் :

........................................

(இரசியாவின், எகித்தின், இங்கிலாந்தின்) வியாபாரத்துக்குத் தடை விதித்தான்.

IV. "அ" பகுதியில் உள்ள சொற்களுடன் "ஆ... யில் உள்ள சொற்கள் தொடர்புபடுகின்றன. அவ்வ... தொடர்புபடும் சொற்களின் இலக்கங்களை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

| அ | ஆ |
|---|---|
| (i) ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனின் முதலமைச்சன் ( ) | (1) பெல் |
| (ii) அரசாங்கச் செய்திமடலை முதன் முதல் பிரசுரித்தவர் ( ) | (2) உவெல்லெஸ்லி |
| (iii) 1800 ஆம் ஆண்டு கண்டிக்குத் தூது சென்றவர் ( ) | (3) பிலிமத்தலாவை |
| (iv) 1817 — 18 கலகத்தில் கலகக்காரருக்குத் தலைமை வகித்த திசாவை ( ) | (4) உறுபெசுபீயர் |
| (v) நீராவி வலுவினுல் இயங்கும் எஞ்ஜினை அமைத்தவர் ( ) | (5) நோத் |
| (vi) தொலைபன்னியைக் கண்டு பிடித்தவர் ( ) | (6) ஜேம்ஸ் வாட் |
| (vii) யக்கோபினரின் தலைவர்களிலே பிரசித்தி பெற்றவர் ( ) | (7) கெப்பெற்றிப்பொல |
| (viii) நோத் ஆள்பதிகாலத்தில் இந்தியாவிலிருந்த ஆங்கிலேய ஆள்பதி நாயகம் ( ) | (8) மக்டோவல் |

...வருவன சரியாயின் (√) என்றும் பிழையாயின் (X) என்றும் அடைப்புக்குறிக்குள் இடுக.

JAFFNA

1. இலங்கையைப் பரிபாலித்த முதல் ஆங்கிலேய ஆள்பதி மெயிட்லன்ட் (.........)

2. 19ஆம் நூற்றுண்டுத் தொடக்கத்தில் ஐரோப்பாவை யுத்தத்திறமையாற் கலக்கியவன் நெப்போலியன். (..... ....)

3. புத்தளப்பகுதி முஸ்லிம்கள் சிலரின் பாக்கைக் கொள்ளையடித்ததினுலே கண்டிக்கு 1815ஆம் ஆண்டு படையெடுத்துச் செல்லுவதற்கு ஆங்கிலேயருக்கு வாய்ப்பு ஏற்பட்டது. (.........)

4. கெப்பெற்றிப்பொல மொறீஷிஸ் தீவிற்கு நாடு கடத்தப்பட்டார். (.........)

5. 1818ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பிரகடனத்தின்படி பிரதானிகளுக்கு வேதனமாகப் பணம் கொடுக்கும் முறை ஏற்படுத்தப் பட்டது. (.........)

6. கோல்புறூக் சீர்திருத்தத்தால் குடியியற் சேவை (சிவில் சேர்விஸ்) யின் தரம் குன்றியது. (.........)

7. இலங்கையிலே முதன்முதலாக அமைக்கப் பெற்ற கரும நிர்வாகக் கழகத்தில் (சட்ட நிருவாகசபை) உத்தியோகப் பற்றற்ற 6 அதிகாரிகள் அங்கத்தவர்களாக இருந்தனர். (.........)

8. உருக்குச் செய்யும் முறையை முதன்முதல் கண்டுபிடித்தவர் ஹென்றி பெல்

9. கைத்தொழிற் புரட்சியினுலே தேநீர் அருந்தும் பழக்கம் ஏற்பட்டது. (... ......)

10. நெப்போலியன் போனப்பாட் வேலூருக்கு நாடுகடத்தப்பட்டான். (.........)

(X)

......)

. ....)

......)

......)

......)

......)

......)

......)

......)

# ORT HISTORY

FOR

## GRADE VIII

North - Ceylon Tamil Works Publishing House

CHUNNAKAM

*Copyright*] 1970 [Rs. 1-25